RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr.Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 29, 08 யூலை 2022 இதழ்:- 11

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
REALTY INC BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி!
போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
உறவுகளே! யூலை மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

# நாளை யூலை 9:-
# திருப்பு முனையை ஏற்படுத்துமா?




கோட்டா கோ கம போராட்டம் சற்று தொய்வடைந்து ராஜபக்சக்கள் மீண்டும் அரசியலுக்குள் வருவதற்கான நகர்வுகளை முன்னெடுத்திருக்கும் நிலையில் கொழும்பு அரசியலில் இரண்டு முக்கியமான காய்நகர்த்தல்கள் இடம் பெற்றுள்ளன.

முதலாவது நாளை 09 யூலை 2022 சனிக்கிழமை ஒன்பதாம் திகதி கொழும்பில் அரச (9ம் பக்கம் பார்க்க)

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund
Desjardins
Manulife
Foresters

## காலால் எட்டி உதைத்த இராணுவ அதிகாரி!
## இடி அமீன் குமாரசிங்க! அதிர்வலைகளை ஏற்படுத்திய காணொளி!



எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இளைஞரை காலால் எட்டி உதைத்த இராணுவ அதிகாரியின் சப்பாத்தை அவரது வாயில் வைத்து திணித்து இருக்க வேண்டும் என்று சிங்கள இனவாத ஊடகமான 'திவயின' கடும் சீற்றத்துடன் ஆசிரியர் தலையங்கம் வெளியிட்டுள்ளது. திவயின நாளேட்டில் புதன் கிழமை 'இடி-அமீன் குமாரசிங்க' எனும் தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: (7ம் பக்கம் பார்க்க)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

## சாவின் விளிம்பில் இலங்கையின் பொருளாதாரம்!
## அமெரிக்க பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹான்கே தெரிவிப்பு!

மிக மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை சமீபத்திய காலங்களில் சந்தித்து வருவதாகவும், இலங்கையின் பண வீக்கத்தை அவதானிக்கும் போது நாட்டின் பொருளாதாரமானது மரணத்தின் விளிம்பில் இலங்கையை கொண்டு சென்றுள்ளது(5ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு வந்த இந்திய உயர்குழு இலங்கைக்குக் கொடுத்த அதிர்ச்சி!

BUY/SELL HOUSES
ARUL
THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial

## Team SIVA WILL BRING THE BEST RESULTS!



18 Years Real Estate Experience

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



HOMELIFE HIGHER STANDARDS

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Central Park / Bramalea

**Brampton** 674,900
Bedrooms: 3 Washrooms: 2
Lots Of Upgrades, Neutrally Painted

### Park Rd / Wentworth

**Oshawa** $499,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Well Maintained Complex

### Kennedy & Progress

**Scarborough** $548,000
Bedrooms: 2 Washrooms: 1
Ground Floor Unit, Great Location

### Eglinton/Markham

**Scarborough** $624,900
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept, Very Large Rooms

### Lawrence/ Galloway

**Toronto** $499,900
Bedrooms: 4 Washrooms: 2
New Hardwood Floors Throughout

### Mccowan/401

**Scarborough** $589,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Newly Renovated ,Open Concept

### Kennedy/401

**Scarborough** $599,900
Bedrooms: 1 Washrooms: 1
Close To High Way, Shopping Plaza

### Dixie/Clark

**Brampton** $629,900
Bedrooms: 3 Washrooms: 2
Upgraded & Spacious Corner Unit

### Eglinton/Markham

**Scarborough** $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated & Low Maintenance Free

### Yonge/Davis

**Newmarket** $1,699,000
Bedrooms:4+1 Washrooms: 5
Over 4000 Sq Ft

### Hwy 7/ Leslie

**Markham** $649,900
Bedrooms: 3+1 Washrooms: 3
Open Concept, Newer Paint

### Don Mills/Eglinton


**Scarborough** $549,900
Bedrooms: 3 Washrooms: 2
Location! Location! Location!

### Donald Cousens Pkwy / 16th Ave

**Markham** $1,499,999
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx. 2520 Sq Ft

### Meadowvale & Ellesmere

**Scarborough** $1,699,000
Bedrooms: 4 Washrooms: 4
$$$$ On Upgrades

### Brimorton/ Scar. Golf


**Scarborough** $1,100
Bedrooms: 1 Washrooms: 1
Basement Apartment for Rent

### Major Mack/Mccowan


**Markham** $2,900
Bedrooms: 4 Washrooms: 3
Throughout Hardwood Floor

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன் கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில்**
**உங்கள் அபிமான**
**ஈழநாடு பத்திரிகையை**
**eelanadu.ca**
**மின்னிதழ்**
**மூலமாகவும் வாசிக்கலாம்.**

# இசைஞானி இளையராஜா எம்.பி. ஆகிறார்!





தமிழ்நாட்டைச் சேர்ந்தவரும் இந்தியாவின் பிரபல இசையமைப்பாளர்களில் ஒருவருமான இளையராஜா மாநிலங்களவை உறுப்பினராகவுள்ளார். குடியரசு தலைவரின் அதிகாரத்துக்கு உட்பட்டு நியமிக்கப்படும் நியமன உறுப்பினர்கள் வரிசையில் இவரது நியமனம் வருகிறது.

இளையராஜா மட்டுமின்றி விளையாட்டுத்துறையில் சாதனை படைத்த முன்னாள் தடகள வீராங்கனை பி.டி. உஷா, பிரபல தெலுங்குப்பட கதையாசிரியரும் இயக்குநருமான விஜயேந்திர பிரசாத், கர்நாடகாவைச் சேர்ந்த சமூக ஆர்வலர் வீரேந்திர ஹெகடே ஆகியோரும் நியமன உறுப்பினர்களாக தேர்வாகின்றனர். இவர்களுக்கான நியமன உத்தரவு விரைவில் குடியரசு தலைவரால் பிறப்பிக்கப்படும்.

இதற்கிடையே, புதிய நியமன உறுப்பினர்களாகவிருக்கும் நால்வருக்கும் பிரதமர் நரேந்திர மோதி தமது ட்விட்டர் பக்கம் வாயிலாக வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இளையராஜாவுக்கான வாழ்த்துச் செய்தியில் தலைமுறைகளை கடந்து மக்களை தன்பால் ஈர்த்த படைப்புலக மேதை இளைராஜா. அவரது இசை பல்வேறு உணர்வுகளை அழகாக பிரதிபலிக்கக்கூடியது. எளிய பின்னணியில் இருந்து இந்த அளவுக்கு சாதனைகளை படைத்தவரின் வாழ்க்கை பயணம் மிகவும் ஊக்கமளிக்கக்கூடியது. அவர் ராஜ்யசபாவுக்கு நியமனம் செய்யப்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது,' என தெரிவித்துள்ளார்.

80 வயதாகும் இளையராஜா இசைத்துறையில் வழங்கி வரும் தொடர் பங்களிப்புக்காக இதுவரை ஐந்து முறை தேசிய விருது பெற்றுள்ளார். சாகர சங்கமம், ருத்ர வீணா என இரு தெலுகு படத்துக்கும், சிந்து பைரவி என்ற தமிழ் படத்திற்கும் சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருதை வென்றுள்ளார். பழசிராஜா மற்றும் தாரை தப்பட்டை படத்துக்காக சிறந்த பின்னணி இசைக்கான தேசிய விருதையும் இளையராஜா வென்றுள்ளார்.

2018ஆம் ஆண்டு இந்திய அரசின் இரண்டாவது மிக உயரிய விருதான பத்ம விபூஷண் விருது இளையராஜாவுக்கு வழங்கப்பட்டது. இரு மாதங்களுக்கு முன்னர் பாபாசாகேப் அம்பேத்கரையும், பிரதமர் நரேந்திர மோதியையும் ஒப்பிட்டு 'அம்பேத்கர் அன்ட் மோதி' என்ற தலைப்பில் புளூாகிரா..ப்ட் பதிப்பகம் வெளியிட்டுள்ள நூலுக்கு இசையமைப்பாளர் இளையராஜா எழுதிய முன்னுரை பரபரப்பாக விவாதிக்கப்பட்டது.

அப்போதே இளையராஜாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது வேறு உயர் பதவி கிடைக்கலாம் என்று பரவலாக பேசப்பட்டது. சமூக ஊடகங்களிலும் அம்பேத்கரை மோதியுடந் இளையராஜா ஒப்பிடுவதா என்று விவாதங்கள் எழுந்தன.

இதற்கு முன்னதாக, கடந்த ஜனவரி மாதம் கோவை கொடிசியா மைதானத்தில் இசைஞானி இளையராஜாவின் 80 வது பிறந்த நாளை முன்னிட்டு நடந்த நிகழ்ச்சியில் தனக்கு இசைஞானி பட்டம் சூட்டிய கலைஞரை நினைவு கூர்ந்து இளையராஜா பேசினார்.

அப்போது தற்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலினை புகழ்ந்துப் பேசிய அவர் 'இசைஞானி என்ற பட்டத்தை கலைஞர் கொடுத்தார் என்பதற்காக அல்ல. தனிப்பட்ட முறையில் தமிழக மக்களை முன்னேற்ற அவர் பட்ட பாடெல்லாம் அரசியல் வட்டாரத்தில் உங்களுக்கு எல்லாம் நன்றாக தெரியும். பொது வாழ்வில் அவர் செய்த நல்ல காரியங்களும் தெரியும். அவர் வழியில் செல்லும் நமது முதல்வரும் நீண்ட நாள் அவரது கனவை நிறைவேற்றி வைப்பார் என நான் முழு மனதுடன் நம்புகிறேன்,' என்று பேசினார்.

இது தவிர பல்வேறு தருணங்களில் மனதில் பட்டதை வெளிப்படையாகவும் சட்டென்று கோபத்துடனும் எதிர்வினையாற்றக் கூடியவராக அறியப்பட்ட இளையராஜா, ஆன்மிக கருத்துக்களை பொது நிகழ்ச்சிகளில் பேசுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இந்த நிலையில், தற்போது இளையராஜா நியமன உறுப்பினராகும் செய்தியை பிரதமர் மோதி பகிர்ந்திருப்பது அவரது ரசிகர்களையும் திரைத் துறையினரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது. தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, நடிகர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன் உள்ளிட்ட திரையுலக பிரபலங்கள் அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்

# சர்வதேசம் மீது நம்பிக்கை போகவில்லை!



தமிழ் மக்கள் சகல உரிமைகளுடனும் சுதந்திரமாக வாழும் நிலை ஏற்பட வேண்டும். அந்த நிலையை ஆட்சியாளர்கள் ஏற்படுத்தாவிடினும் சர்வதேச சமூகம் ஏற்படுத்தியே தீரும். அந்த நம்பிக்கை இன்னமும் போகவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சிதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இந் நிலையில் கூட்டமைப்பைச் சிதைக்கும் நோக்குடன் விமர்சனங்கள் முன்வைக்கப் படலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் தீர்மானத்தின்படி கூட்டமைப்பின் தலைவராக நானே தொடர்ந்தும் பதவி வகிக்கின்றேன்.

கூட்டமைப்புக்குள் இருப்பவர்கள் எவரும் தலைவர் பதவியை சவாலுக்குட்படுத்தி கருத்துக்கள் எதனையும் முன்வைக்கவில்லை. எனது உடல் நிலையில் சிறிய தாக்கம் ஏற்பட்டாலும் நான் இன்னமும் தைரியத்துடன்தான் இருக்கின்றேன்.

தமிழ் மக்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நான் அவதானித்துக் கொண்டுதான் இருக்கின்றேன். அந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வு விடயங்கள் விடயங்கள் தொடர்பில் உள்நாட்டு, வெளிநாட்டு முக்கியஸ்தர்களுடன் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் பேச்சும் நடத்தி வருகின்றேன்' என்றார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

Friends MATRIMONY

உங்கள் திருமணத் தேடலுக்கோர் முற்றுப்புள்ளி...

10,000க்கு மேற்பட்ட வரன்கள் கையிருப்பில்! 10,000+



## இலங்கைத் தமிழர்களுக்கான
உலகளாவிய திருமண இணையத்தளம்.

**மணமகள் தேவை**

கனாவில் வசிக்கின்ற கத்தோலிக் 33 வயது புகைப்பட கலைஞராக தொழில் புரியும் மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

**மணமகள் தேவை**

கனடாவில் வசிக்கின்ற 35 வயது Mixed வேளாளர், IT consultant தொழில் புரியும் மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

**மணமகள் தேவை**

கனடாவில் வசிக்கின்ற 39 வயதான வெள்ளாளர், Technician மணமனுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

- 416 477 2259
  647 709 1536
  416 477 6854
- GTA Square- 5215
  Finch Ave. E. Unit 257
- friendsmatrimonym@gmail.com

Mon to Fri
10AM to 7PM

Sat
1PM to 7PM

www.friendsmatrimony.com



ஸ்ரீ செல்வ கணபதி துணை ஓம் நமோ நாராயண



## அருள்மிகு கனடா
## திருப்பதி வெங்கடாசலபதி ஆலயம்

ஸ்ரீ சம்பத் விநாயகர் ஏகாதசதின

## அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்



ஜூலை 1ம் தேதி முதல் 12ம் தேதி வரை
(வெள்ளி) (செவ்வாய்)

இந்திர கண்டம் என்று போற்றப்படுகின்ற வட அமெரிக்க கண்ட ரொறன்ரோ மாநகரத்தில் ஸ்காபுரோ பிரதேச மத்தியில் கோவில் கொண்டு எழுந்தருளியுள்ள அருள்மிகு கனடா திருப்பதி வெங்கடேஸ்வரர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சம்பத் விநாயக பெருமானிற்கு முதலாம் ஆண்டு ஏகாதச தின அலங்காரத் திருவிழா நிகழும் சுபகிருது வருடம் ஆனி மாதம் 17ம் நாள் (07.01.2022) வெள்ளிக் கிழமை முதல் ஆனி 22ம் நாள் (07.12.2022) செவ்வாய்கிழமை வரை நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 07.01.22 | வெள்ளி | காலை 8:30 | பூர்வாங்கம், விநாயகர் அனுக்ஞை ராக்ஷாபந்தனம் (காப்பு கட்டுதல்) |
| 07.02.22 | சனி | மாலை 5:30 | 1ம் நாள் உற்சவ பூஜை |
| 07.05.22 | செவ்வாய் | மாலை 5:30 | 4ம் நாள் மாம்பழத் திருவிழா |
| 07.07.22 | வியாழன் | மாலை 5:30 | 6ம் நாள் வேட்டைத் திருவிழா |
| 07.08.22 | வெள்ளி | மாலை 5:30 | 7ம் நாள் சப்பறத் திருவிழா |
| 07.09.22 | சனி | காலை 6:00 | 8ம் நாள் நவகலச அபிஷேகம் |
| | | காலை 9:00 | தேர் ஆரோகணம், தேர் பவனி |
| | | மதியம் 12:00 | பச்சை சாத்தி தேர் அவரோகணம் |
| | | மதியம் 12:30 | பிராயச்சித்த அபிஷேகம் |
| 07.10.22 | ஞாயிறு | காலை 10:00 | 9ம் நாள் தீர்தத் திருவிழா |
| 07.11.22 | திங்கள் | மாலை 5:30 | 10ம் நாள் பூங்காவனத் திருவிழா |
| 07.12.22 | செவ்வாய் | மாலை 5:30 | 11ம் நாள் வைரவர் மடை |

மேற்படி திருவிழாக்கள் நடைபெறும் 11 நாட்களும் அடியார்கள் ஆசார சீலர்களாக ஆலயத்திற்கு வருகை தந்து உற்சவங்களில் பங்கு கொண்டு பால், பழம், பூக்கள், பூஜைப் பொருட்கள் கொண்டுவந்து பெருமானுக்கு அர்ப்பணித்து திருவருள் பெற்று சீரும் சிறப்புமாக வாழும் வண்ணம் அடியார்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

தென்னாடுடைய சிவனே போற்றி! எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!
இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!

ஆலய அர்ச்சகர்கள்:
"சைவாகம ப்ரவரா" சிவா குருக்கள் 416 729 3456
சுதர்சன பட்டர் 647 939 5061

ஆலய நிர்வாகம்
416-400-5784 / 647-990-5784

1240 Ellesmere Road, Scarborough, ON.



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# இலங்கையின் கடன் நெருக்கடி ஆசிய நாடுகளுக்கு எச்சரிக்கை! மலேசியாவின் முன்னாள் பிரதமர் மகாதீர் முகமட் தெரிவிப்பு!

இலங்கையின் தற்போதைய கடன்நெருக்கடியானது ஆசிய நாடுகளிற்கு ஒரு எச்சரிக்கை என தெரிவித்துள்ள முன்னாள் மலேசிய பிரதமர் மகாதீர் முகமட் நாணயத்தை மோசமாக நிர்வகித்ததும் மோசமான முதலீட்டுக்கொள்கையுமே இதற்கு காரணம் என தெரிவித்துள்ளார்

சர்வதேச நாணயநிதியத்தையும் அவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.சர்வதேச ஊடகமொன்றிற்கான பேட்டியில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார் இலங்கையின் தற்போதைய கடன் நெருக்கடியானது ஆசிய நாடுகளிற்கான ஒரு எச்சரிக்கை.

ஆசிய நாடுகள் பொறுப்புணர்வுள்ள நிதிக் கொள்கையை பின்பற்றவேண்டும் அல்லது மன்னிக்காத சர்வதேச நாணயநிதியத்தின் கரங்களில் சிக்க வேண்டியிருக்கும்.


கடன் வழங்கியவர்களிற்கு செலுத்துவதற்கான வலுவான நாணயம்இருப்பு இலங்கையிடம் இல்லாததே அதன் பிரச்சினை ,நாணயத்தை மோசமாக நிர்வகித்ததும் மோசமான முதலீட்டுக்கொள்கையுமே இதற்கு காரணம். அனைவரும் இலங்கையின் பாதையில் செல்வதற்கான சாத்தியக்கூறுகளால் அச்சுறுத்தப் பட்டுள்ளனர், இது அனைவருக்கும் ஒரு பாடம்.

சர்வதேச நாணயநிதியம் அல்லது உலக வங்கியிடம் நீங்கள் சென்றீர்கள் என்றால் அவர்கள் நீங்கள் உங்கள் கடன்களை திருப்பிச்செலுத்தும் விடயத்தில் மாத்திரம்



அக்கறை செலுத்துவார்கள். குறிப்பிட்ட நாட்டிற்கு பொருளாதார ரீதியில் அல்லது சமூக ரீதியில் என்ன நடக்கின்றது என்பது குறித்து அவர்களிற்கு கவலையில்லை. அவர்கள் நாட்டையும் அதன் பொருளாதார கொள்கையையும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சிப்பார்கள் அதாவது நாங்கள் அவர்களிடம் சரணடைய வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

# சாவின் விளிம்பில் இலங்கையின் பொருளாதாரம்! அமெரிக்க பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹான்கே தெரிவிப்பு!



மிக மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை சமீபத்திய காலங்களில் சந்தித்து வருவதாகவும், இலங்கையின் பண வீக்கத்தை அவதானிக்கும் போது நாட்டின் பொருளாதாரமானது மரணத்தின் விளிம்பில் இலங்கையை கொண்டு சென்றுள்ளது எனவும் அமெரிக்க பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹான்கே தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பணவீக்கம் தற்போது 122 வீதமாக உயர்ந்துள்ளதாக சுட்டிக் காட்டியுள்ள அவர் சர்வதேச நாணய நிதியம் கூட இலங்கைக்கான கடன் முறையை நிராகரித்துள்ளது என்றும் கூறியுளளார். இதுவரை காலமாக சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை 16 வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. ஆனால் இலங்கை அதிகாரிகள் எவரும் அந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் அவதானிப்பின் படி வருடமொன்றுக்கு அதிக பணவீக்கம் விகிதம் பதிவாகிய நாடுகளின் பணவீக்க பட்டியலில் இலங்கை இரண்டாம் இடத்தை அடைந்துள்ளது.

சிம்பாபேவேவின் மிக மோசமான பணவீக்க நிலைமைகளுக்கு அடுத்த படியாக இலங்கை 122 வீத பணவீக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது என தெரிவித்துள்ள அவர், எதிர்வரும் காலங்களில் மிக மோசமான நிலைமைகளுக்கு இலங்கை முகங்கொடுக்க நேரிடும் எனவும் தெரிவித்துள்ளார்.

# சிங்களப் பொதுமகனை எட்டி உதைத்த இராணுவ அதிகாரி இடைநிறுத்தம்!

குருநாகல், யக்கபிட்டியவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொதுமகன் ஒருவரை எட்டி உதைத்த இராணுவ அதிகாரி அனைத்து கடமைகளில் இருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் முடியும் வரை லெப்டினன்ட் கேணல் அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேவின் பணிப்புரைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

5 பேர் கொண்ட விசாரணை நீதிமன்றத்தின் பரிந்துரைகள் வரும் வரை குற்றம் சாட்டப்பட்ட இராணுவ அதிகாரி அனைத்துப் பணிகளில் இருந்தும் உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இராணுவ அதிகாரி ஒருவர், பொதுமகன் ஒருவரை எட்டி உதைத்த வீடியோ சமூக ஊடகங்களில் வைரலாக பரவியதை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பௌத்த பீடங்களின் கையறு நிலை?

இலங்கையின் செல்வாக்கு மிக்க பௌத்த பீடங்களில் முதன்மை யானதாகக் கருதப்படும், கண்டி, அஸ்கிரிய பீடத்தின் பீடாதிபதி, வரகொட ஞானரத்தின தேரர், இலங்கையை கடவுள் தான் காப்பாற்ற வேண்டு மென்று குறிப்பிட்டிருக்கின்றார். தங்களின் எச்சரிக்கைகளை ஆட்சியாளர்கள் பொருட்படுத்தவில்லை. இதன் காரணமாகவே இவ்வாறானதொரு நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார். இப்போது கேள்வி எந்தக் கடவுள் என்பது தான்?

மேற்குலகத்தின் கிறிஸ்தவ கடவுளா அல்லது இந்தியாவின் இந்து கடவுளா?

விடுதலைப் புலிகளை வீழ்த்தியமை தொடர்பில் பாற்சோறு பரிமாறியவர்களே, இப்போது, சிங்களவர்களை கடவுகள் தான் காப்பாற்ற வேண்டுமென்று கூறும் நிலைமைக்கு கீழறங்கியிருக்கின்றனர். யுத்த வெற்றி வாதத்தின் மோசமான தோல்விதான் இவ்வாறானதொரு நிலைமைக்கு காரணமென்னும் உண்மையை இப்போதாவது பௌத்த மதபீடங்களால் உணர முடிகின்றதா என்பதை அறிய முடியவில்லை. யுத்த வெற்றி வாதத்தை காண்பித்துத் தான், ராஜபக்ஷக்கள், சிங்கள பௌத்த பீடங்களையும் பெரும்பான்மையான சிங்கள மக்களையும் தங்கள் வசப்படுத்தினர். அதிகாரங்களை தங்கள் குடும்பத்தை நோக்கி குவித்திருந்தனர்.

ராஜபக்ஷக்களின் இயலாமையை கண்டதன் பின்னர் தான், பௌத்த பீடம் கடவுள் வாதத்தில் தஞ்சமடைகின்றது. சிங்கள ஆளும் வர்க்கத்தின் அரசியலும் பௌத்த மதபீடங்களின் செல்வாக்கும் பிரிக்க முடியாதவை. 1957இல் எழுதப்பட்ட விகாரைக்குள் புரட்சி என்னும் நூலுடன் ஆரம்பிக்கின்றது பௌத்த பீடங்களின் அரசியல் செல்வாக்கு. இலங்கைத் தீவானது, சிங்களவர்களுக்கான தீவாக மட்டுமே பேணிப் பாதுகாப்பதுதான் விகாரைப் புரட்சியின் இலக்கு. இந்த இலக்கையே, இலங்கையை மாறி, மாறி ஆட்சி செய்யும் சிங்கள கட்சிகள் முன்னெடுத்து வந்திருக்கின்றன. இது தான் இதுவரையான இலங்கைத் தீவின் வரலாறு.

இந்த காவியரசியல் மேலாதிக்கம் இலங்கைத்தீவை முன்நோக்கி நகர்த்துவதில் எந்தவொரு பங்களிப்பையும் இதுவரையில் வழங்கவில்லை என்பதுதான் கசப்பான உண்மையாகும். எனினும், இந்த காவிகளின் ஆதிக்கத்தை முறியடித்துக் கொண்டு, பயணிக்கும் துணிவுள்ள எந்தவொரு சிங்கள தலைவரையும் இதுவரை இலங்கைத்தீவு காணவில்லை.

அமெரிக்காவின் மிலேனியம் ஒத்துழைப்பு திட்டத்தை எதிர்த்து பிரசாரம் செய்தபோது, அஸ்கிரிய பீடம் என்ன ஆலோசனையை வழங்கியிருந்தது? மனித உரிமைகள் விவகாரத்தில் முன்னேற்றங்களை காண்பிக்க வேண்டுமென்று அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன ஆனால், ராஜபக்ஷக்களோ அவற்றை புறம்தள்ளி செயல்பட்டனர். இதன் போது, ராஜபக்ஷகளுக்கு அஸ்கிரிய பீடம் என்ன ஆலோசனைகளை வழங்கியிருந்தது? ஆட்சியாளர்கள் இந்திய, மேற்குல எதிர்ப்பை மௌனமாக அங்கீகரிக்கும் செயல்பாடுகளையே பௌத்த மத பீடங்கள் முன்னெடுத்து வந்திருக்கின்றன.

சிங்கள பௌத்த தேசியவாதிகளின் மேலாதிக்க நடவடிக்கைகளை பௌத்த மதபீடங்கள் ஒரு போதுமே விமர்சித்ததில்லை. தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் பௌத்தர்களே இல்லாத இடங்களில் புத்தர் சிலைகளை நிறுவி, புத்தரின் போதனைகளுக்கு மாறாக சிங்கள மேலாதிக்கவாதிகள் செயல்படுகின்ற போதெல்லாம், அஸ்கிரிய பீடம், என்ன செய்து கொண்டிருந்தது?

ஆழமாக நோக்கினால், இலங்கைத்தீவு இவ்வாறானதொரு நெருக்கடிக்குள் சிக்கியிருப்பதற்கு முதல் காரணம் பௌத்த மதபீடங்களேயாகும். இனவாத அரசியல்வாதிகள், தொடர்ந்தும் இனவாதத்தில் திருப்தி கொண்டமைக்கு பின்னால் பௌத்த மத பீடங்களின் ஆசீர்வாதமே இருந்திருக்கின்றது. இந்த அடிப்படையில் சிந்தித்தால் (20ம் பக்கம் பார்க்க)


Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

NISHANTHAN LAW OFFICE

Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



Phone : 416-289-9229

39 Devonshire Ave- Markham ON- L3S 3P2

# தெற்கின் சமூகம் உணர்ந்தால் மாத்திரமே வடக்கின் சமூகத்தோடு கை கோர்க்க முடியும் -அருட்தந்தை சக்திவேல் தெரிவிப்பு!

தெற்கின் சமூகம் உணர்ந்தால் மட்டுமே வடக்கின் சமூகத்தோடு கைகோர்க்க முடியும். புதிய அரசியல் கலாச்சாரத்தை கட்டி எழுப்ப முடியும். எதிர்காலம் எதிர் கால சந்ததியினர் சுதந்திரத்தை அனுபவிக்க முடியும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் 05 யூலை 2022 வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, குருநாகல் ஐஓசி பெட்றோல் நிலையத்தில் இராணுவ அதிகாரி பொதுமகன் மீது நடத்திய மிலேச்சதனமான தாக்குதல் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று மட்டுமல்ல நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவும் வேண்டும்.

இராணுவ அதிகாரியின் செயற்பாட்டை அமைதியுடன் அனுமதித்து நின்ற ஏனைய இராணுவத்தினரும் பொலிசாரும் தண்டனைக்குரியவர்களே.

இதே இராணுவம் வடகிழக்கில் நிகழ்த்திய கொடுமைகளுக்கு நீதி கேட்கும் குரலும் தெற்கின் சமூகத்தின் காதுகளுக்கும் எட்டவேண்டும். உணர வேண்டும். அது இதுவரை உணரப்படவில்லை.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மக்கள் குடும்பமாக வீதிக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர். அரசு நாட்டின் வளங்களையும், பொருளாதாரத்தையும் சரியான வழியில் முகாமைத்துவம் செய்யாமையே இதற்கு காரணம்.

தன்னுடைய பிழைகளை திருத்திக் கொள்வதற்கு பதிலாக இராணுவத்தை வீதியில் இறக்கியிருப்பதும் அவர்கள் தமது படைபலத்தை பொதுமக்கள் மீது காட்டுவதும் அதிகரித்துள்ளன. இது இன்னும் ஒரு இரத்தம் சிந்துதலுக்கு வழி வகுத்து விடுமோ எனும் பயம் மக்கள் மத்தியிலே எழுந்துள்ளது.

வடகிழக்கில் இராணுவத்தினர் பொது மக்களுக்கு எதிராக நிக ழ்த்திய வன்முறை சம்பவங்களே 30 வருட யுத்தத்திற்கு காரணம். அது மட்டுமல்ல அதே இராணுவம் யுத்த குற்றங்களையும் இழைத்துள்ளது. இன அழிப்பையும் அரச ஆதரவோடு நிகழ்த்தியுள்ளது. இதுவே தமிழர்களின் குற்றச் சாட்டு.

வடகிழக்கு எங்கும் பலவந்த கைதுகளும், காணாமல் ஆக்குதலும் மட்டுமல்ல சமூக கொலைகளும் நிகழ்த்தப்பட்டுள்ளன. இராணுவத்தினர் அதனை நிகழ்த்தியுள்ளனர் என்பது நிரூபிக்கப்பட்டும் உள்ளது உதாரணமாக செம்மணி, மிருசுவல் படுகொலைகளை நாம் குறிப்பிடலாம்.

இக்குறைகளுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படவும் இல்லை நீதிமன்றம் மரண தண்டனை கொடுத்த போது கூட அந்த மரணதண்டனையில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றார் அத்தோடு குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட இராணுவத்தினர் பதவி உயர்வு கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டிருக்கும் இதையெல்லாம் தெற்கின் சமூகம் பார்த்து மகிழ்ந்தது. வீரப்படையினர் என கொண்டாடினர். இறுதி யுத்தத்தின் பின்னர் இராணுவத் திடம் தனது உறவுகளைகையளித்த அன்னையர் கடந்த 13 வருட காலமாக எங்கள் பிள்ளைகளுக்கு, எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என கேட்கின்றனர். அது தெற்கு சமூகத்தின் காதுகளுக்கு எட்டவில்லை. நீதி கேட்போர் தேசத் துரோகிகளாகவும் பயங்கர வாதிகளாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.



அது மட்டுமல்ல 1971, 1988-89 காலப் பகுதியில் இராணுவத்தின் முகம் என்னவென்று தெற்கின் சமூகத்திற்கு தெரிந்தும் இராணுவம் வடக்கில் நடத்திய வன் கொடுமைகளை அனுமதித்த பௌத்தப் பிக்குகள் ஆசீர்வதித்தனர். வடகிழக்கில் நடந்த உண்மையின் நேரடி சாட்சிகள் முன்வைக்கப்பட்ட போதும் அவற்றை ஏற்றுக் கொள்வதற்கு தெற்கின் சமூகம் ஆயத்தமாக இருக்கவில்லை.

இப்போது அதே இராணுவம் தெற்கில் ஆயுதங்களை தூக்கி நிற்கின்ற போது, நெஞ்சில் உதைக்கும் போது வலிக்கிறது. இதனைத் தான் அரசியல் கைதியான குட்டிமணி 1982ல் வெளிப்படையாக அறிவித்தார். வடக்கிலே இராணுவம் எதனை செய்கின்றதோ அது தெற்கிலும் நடக்கும் எனும் பொருள்பட கருத்துரைத்தார். அது நிதர்சனமாக நடந்து கொண்டிருக்கின்றது.

கடந்த 74 ஆண்டுகளாக இந்நாட்டை ஆட்சி புரிபவர்கள் மக்களுக்கு எதிரானவர்கள் என்பதை தமிழர்கள் பல தசாப்தங்களாக கூறி வந்தார்கள். பேரினவாத போதை ஊட்டப்பட்டதால் தெற்கு அதனை ஏற்கவில்லை. இப்போது அதை அரசு பசியையும், பட்டினியையும் நாட்டுக்கு தந்துள்ளது. ஆட்சியாளர்கள் தங்கள் பதவிகளில் மட்டும் நோக்காக கொண்டு செயல்படுகின்றார்.

தமிழர்களுக்கு எதிராக இராணுவம் புரிந்த பாரிய யுத்த குற்றங்களுக்கான நீதி தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டும். அரசியல் நீதியும் தமிழ் மக்களுக்கு உரியது. இதனையும் தெற்கின் சமூகம் உணர்ந்தால் மட்டுமே வடக்கின் சமூகத்தோடு கைகோர்க்க முடியும். புதிய அரசியல் கலாச்சாரத்தை கட்டி எழுப்ப முடியும். எதிர்காலம் எதிர் கால சந்ததியினர் சுதந்திரத்தை அனுபவிக்க முடியும்.

நாடு முழுவதும் தற்போது மக்கள் முகம் கொடுக்கின்ற பொருளாதார நெருக்கடிக்கு, நாட்டில் நீண்ட காலம் நிலவிய யுத்தமும் அதற்காக பல்வேறு நாடுகளால் கொடுக்கப்பட்ட அல்லது வாங்கி குவிக்கப்பட்ட இராணுவ தளபாடங்களும் அவற்றின் பராமரிப்பும் நாட்டின் அபிவிருத்திக்கு எவ்வகையிலும் தொடர்பற்ற இராணுவத்தை கொண்டிருகின்றமையுமே அடிப்படை காரணம். இதனை தெற்கு உணர வேண்டும்.

உலகின் அதி கூடிய இராணுவத்தை கொண்டிருக்கின்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை 14 ம் இடத்தை தமதாக்கியுள்ளது. இந்த சுமையே மக்களை வீதிக்கு தள்ளியுள்ளது. அதற்கு சொந்தக்காரர்களே இன்று வரை நாட்டை ஆள்கின்றனர். முற்படையினர் சர்வாதிகாரத்தினதும் முதலாளித்துவத்தினதும் காவலர்களே என்பதை தெற்கு உணர்கின்ற காலமிது.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# காலால் எட்டி உதைத்த இராணுவ அதிகாரி!

## இடி அமீன் குமாரசிங்க! அதிர்வலைகளை ஏற்படுத்திய காணொளி!

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இளைஞரை காலால் எட்டி உதைத்த இராணுவ அதிகாரியின் சப்பாத்தை அவரது வாயில் வைத்து திணித்து இருக்க வேண்டும் என்று சிங்கள இனவாத ஊடகமான 'திவயின' கடும் சீற்றத்துடன் ஆசிரியர் தலையங்கம் வெளியிட்டுள்ளது.

திவயின நாளேட்டில் புதன் கிழமை 'இடி-அமீன் குமாரசிங்க' எனும் தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

குருநாகல் யக்கஹாபிட்டியவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இளைஞனை இராணுவ லெப்டினன்ட் ஒருவர் உதைக்கும் காட்சிகள் அடங்கிய காணொளி இந்த நாட்களில் பரவி வருவதை எமது வாசகர்கள் அறிவர். இணையம் ஒரு அசுத்தமான இடம். நல்ல இடமும் கூட. இது மிகவும் அசுத்தமான இடமாகும். ஏனெனில் இது ஒரு வலைப்பின்னல் தளமாகப் பயன் படுத்தப்பட்டு அப்பாவி மக்களைப் பகிரங்கமாக அவதூறு செய்யவும், தவறான செய்திகளைப் பரப்பவும் முடியும்.

மேலும், இது சிறந்த இடமாகும். ஏனெனில் இது சமூகத்தில் ஊழல் மோசடிகள் மற்றும் பிற அழுக்கு விளையாட்டுகளை உடனடியாக அம்பலப்படுத்தும் மற்றும் முறைப்பாடு அளிக்கும் தளமாகும். youtube facebook whatsapp போன்ற இணைய வலையமைப்பு இல்லையென்றால், மேற்கூறிய இளைஞன் எப்படி உதைக்கப்பட்டான் என்பதை இராணுவ லெப்டினன்ட் ஒரு போதும் வெளிப்படுத்த மாட்டார்.

இணையம் மக்கள் அறிக்கையிடல் என்ற கருத்தை ஊக்குவித்துள்ளது. ஒரு சம்பவத்தைப் முறைப்பாடு அளிப்பதற்கும், அதனை வானொலி, தொலைக்காட்சி அல்லது செய்தித்தாளுக்கு அனுப்புவதற்கும், அறிக்கையிடும் நபர் ஒரு ஊடகவியலாளராக இருக்க வேண்டும். அதற்குக் காரணம், இந்நாட்டில் உள்ள வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள், பத்திரிகை அலுவலகங்கள் என்பன பொதுமக்களுக்குப் பொறுப்புக் கூறும் நிறுவனங்களாகவே இருக்கின்றன. இணையம் மற்றும் அதன் தொடர்பு வலையமைப்பு, சமூக ஊடக வலைப்பின்னல்கள் ஆகியவற்றிற்கு இறந்த பிசாசு பொறுப்பல்ல பொறுப்பும் அல்ல. எனவே, சமூகத்தில் நடக்கும் அநீதியை பார்க்கும் எந்த குடிமகனும், கையில் செல்லிடப்பேசி இருந்தால், அது தொடர்பான ஊழல் அல்லது மோசடியை படம் பிடித்து உடனடியாக இணையத்தில் பதிவேற்றம் செய்யலாம்.

குறித்த இளைஞனை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து தாக்கிய லெப்டினன்டின் பெயர் விராஜ் குமாரசிங்க என தெரியவந்துள்ளது. youtube இற்கு சென்று இடி அமீனின் பழைய காணொளிகளைப் பார்த்தால் ஒன்று தெளிவாகத் தெரியும் லெப்டினன்ட் விராஜ் குமாரசிங்க மற்றும் இடி அமீனின் நடத்தையும் ஒன்று தான். இடி அமீனைப் பற்றி இங்கு சிறிது அறியத்தருகின்றோம். உகண்டா இராணுவத்தில் அதிகாரியாக இருந்த இடி அமீன் இராணுவ சதிப்புரட்சி மூலம் ஆட்சிக்கு வந்து அந்நாட்டை ஆண்டார். இடி அமீனுக்கும் தலையில் முடி இல்லை. விராஜ் குமாரசிங்கவுக்கும் மொட்டை தான். இடி அமீனும் உயர



மானவர். விராஜ் குமாரசிங்கவும் உயர மானவர். எனினும், இந்த இராணுவ அதிகாரியின் நடவடிக்கைகள் மிகவும் கேவலமானதும், இழிவானதும் என்றே கூற வேண்டும்.

சுற்றிலும் கூடியிருந்த மக்கள் செய்ய வேண்டியதெல்லாம், லெப்டினன்ட்டைப் பிடித்து, அவரது காலைத் திருகி, சப்பாத்தை வாயில் திணித்திருக்க வேண்டும். குறித்த இளைஞன் மீதான தாக்குதல் காணொளியை பார்க்கும் போது லெப்டினன்ட் விராஜ் குமாரசிங்க சுயநினைவின்றி அல்லது அறியாமலேயே நடந்து கொள்கின்றார் என்பது தெளிவாகின்றது.

இராணுவ வீரர்கள் அந்த இளைஞனைப் பிடித்துக் கொண்டிருக்கும் போது, எங்கிருந்தோ லெப்டினன்ட் குமாரசிங்க வந்து அந்த இளைஞனை எட்டி உதைத்து விட்டு அவரைக் கடந்து சென்று வெறித்தனம் ஆடுவதனை கண்டோம். இந்த இளைஞனை லெப்டினண்டிடம் இருந்து எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த காவல்துறையினர் மீட்டனர். எமக்குத் தெரிந்த வரையில் எந்த ஒரு பதற்றகரமான சூழ்நிலையிலும் காவல் துறையினருக்கு தலையிடும் அதிகாரம் இராணுவத்திற்கு இல்லை. மேற்கண்ட சம்பவத்தில் இருந்து பல கேள்விகளும் நிலைப்பாடுகளும் எழுகின்றன. 88, 89 பயங்கரவாத நடவடிக்கைக்களின் போது லெப்டினன் குமாரசிங்க இராணுவத்தில் இருந்திருந்தால் இறந்த இளைஞர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்திருக்கும் என்பது தான் பிரச்சினை.

இதில் இருந்து வெளிப்படும் நிலைப்பாடு என்னவென்றால், போர் மற்றும் கோவிட் தடுப்பூசி வேலைகளைத் தவிர மற்ற சிவில் நடவடிக்கைகளில் இராணுவத்தை ஈடுபடுத்துவதைத் தவிர்க்க அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும்.

இதேவேளை, காலி தெவத்த பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து இராணுவ அதிகாரி ஒருவர் பேரூந்து ஓட்டுநர் ஒருவரை தாக்கியுள்ளதாக தெரிய வந்துள்ளது. இராணுவம் இது போன்ற அத்துமீறல்களை செய்யக்கூடாது. இந்நாட்டு மக்கள் தற்போது கொதிப்படைந்துள்ளனர். அவர்கள் தீயில் எரிவதைத் தாங்கத் தொடங்கியுள்ளனர். இராணுவம் இழக்க வேண்டியது நிறைய உள்ளது. ஆனால் தீயில் எரியும் பொதுமக்களுக்கு இழப்பதற்கு ஒன்றுமில்லை.

இதேவேளையில், குமாரசிங்க சம்பவத்தை தனது செல்லிடப்பேசியில் பதிவு செய்த ரசிக ஹேரத்துக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார். சம்பவத்தின் போது, அவர் யக்கஹாபிட்டியவில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையில் இருந்தார். லெப்டினன்ட் குமாரசிங்க தான் தனக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார் என்பது அவர் கருத்து. அதற்கான ஆதாரமும் அவரிடம் உள்ளது.

லெப்டினன்ட்டின் இழிவான நடத்தை குறித்து சிறிலங்கா இராணுவம் என்ன செய்ய விரும்புகிறது? இச்சம்பவம் குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள லெப்டினன்ட் குமாரசிங்க, காயம் ஏற்படாதவாறே அந்த இளைஞனை உதைத்ததாக கூறுகிறார். குமாரசிங்க செய்தது மிகவும் கிறுக்குத்தனமான செயல் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இது தொடர்பில் சிறிலங்கா இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் நிலந்த பிரேமரத்ன மிகவும் நகைச்சுவையான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.


அவரது அறிக்கையும் தற்போது இணையத்தில் உள்ளது. இவ்வாறானதொரு இக்கட்டான சூழ்நிலையில், ஊடகங்களுக்கு வன்முறைச் செய்திகளை வழங்கும் தளமாக சிறிலங்கா இராணுவம் இருக்கக் கூடாது என நாங்கள் விரும்புகின்றோம். லெப்டினன்ட் விராஜ் குமாரசிங்கவை உடனடியாக பணி இடைநிறுத்தம் செய்வதும், சம்பவத்தின் சாட்சிகளை அவர் மீது செல்வாக்கு செலுத்த முடியாதவாறு மௌனமாக்குவதும் பாதுகாப்பு செயலாளர் மற்றும் இராணுவத் தளபதியின் பொறுப்பாகும். சிறிலங்காவின் அண்மைக்கால வரலாற்றில் மிகவும் கடினமான காலகட்டத்தை இந்நாட்டு மக்கள் கடந்து செல்கின்றனர். அந்த மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டால், முழு இலங்கையும் பெரிய போராட்டக் களமாக மாற வாய்ப்புள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இஸ்லாமியரின் மக்காவில் தமிழிலும் சொற்பொழிவு!

இஸ்லாமியர்களின் முக்கிய புனித தலங்களில் ஒன்றான மக்காவில் இனி தமிழிலும் அரஃபா நாள் சொற்பொழிவு ஒலிபரப்பப்படவுள்ளது.

இஸ்லாத்தின் புனித நாட்களில் ஒன்றான அரஃபா நாள் பிரசங்கத்தின் மொழிபெயர் ப்பு ஏற்கனவே 10 மொழிகளில் ஒலி பரப்பப்படுகிறது. இந்நிலையில், தமிழ் உட்பட 4 மொழிகளில் இனி சொற் பொழிவு மொழிபெயர்க்கப்பட்டு ஒலி பரப்பப்படும் என்று மக்கா- மதீனா புனித தலங்களின் பொது தலைமை தலைவர் அப்துல் ரஹ்மான அல்-சுதைஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய நாட்காட்டியின்படி 12 ஆவது மாதமான துல்ஹஜ் 9ஆம் திகதி அரஃபா நாள் கடைப்பிடிக்கப்படுகின்றது. இந்த நாளிலேயே இறுதித் தூதுவரான முஹமது நபிகள் அரஃபா மலையில் தனது இறுதிப் பிரசங்கத்தை நிகழ்த்தியிருந்தார் என்று நம்பப்படு கின்றது. மக்காவில் உள்ள நிம்ரா மசூதியில் அரஃப தின உரை கடந்த 5



ஆண்டுகளாக அரபு அல்லாத உலகின் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு ஒலி பரப்பப்படுகிறது. ஆங்கிலம், பிரெஞ்சு, பாரசீகம், ஆபிரிக்க எனப் 10 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நிலையில் இப்போது தமிழும் உள்வாங்கப்பட்டுள்ளது.




மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் துணை

ஜாதகம் பார்க்கப்படும்

கடந்த 40 வருடமாக தென்னிந்தியா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் கனடாவில் பல தமிழ் மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்த திரு. கோ. காசிலிங்கம் அவர்கள் இப்போது கனடாவில். பிறந்த வருடம், மாதம், திகதி, நேரத்தை சொன்னால் போதும் நந்தி வாக்கியம் மூலம் நாள் நட்சத்திரம் கண்டு நடந்தது நடக்கப் போவதை தனது திறமையால் மிகத் துல்லியமாகக் குறித்து எழுதி பலன் சொல்லப்படும்.

குழந்தைகளுக்கு ஜாதகம் எழுதிக் கொடுக்கப்படும்

திருமணப் பொருத்தம் பார்த்து சொல்லப்படும்

கோ. காசிலிங்கம்

1320 Pharmacy Ave, Scarborough ON, M1R 2T3 (Main Intersection Pharmacy and Ellesmere Rd)

Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164



# சர்வதேச நாணய நிதியத்திடம் 6 தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாக விடுத்துள்ள கோரிக்கைகள் என்ன?

• போரின் பின்னரும் முப்படைகளுக்கு அதிகளவிலான நிதி ஒதுக்கீடுகள்.

•பேரினவாத தேசிய கொள்கைகள் முழுமையாக மாற்றப்பட வேண்டும்.

• புலம்பெயர் தமிழர்கள் முதலீடுகளை செய்வதற்கு உறுதிப்பாடுகள் தேவை.

•ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு நாட்டை வழி நடத்துவதற்கான தகுதிகள் இல்லை.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு சர்வதேச சமூகத்தினால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு முயற்சியிலும் தமிழர்களை (இலங்கை வாழ் மற்றும் புலம்பெயர்) பங்குதாரர்களாக உள்ளடக்கியிருக்க வேண்டும் என்று ஆறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் கடிதம் மூலமாக வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா, தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் தலைவர் முன்னாள் நீதியரசர். சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி, தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ)தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி, தமிழ் மக்கள் விடுதலைக்கழகத்தின் (புளொட்) தலைவர் சித்தார்த்தன் எம்.பி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தா ஆகியோரே கூட்டாக கடிதத்தினை அனுப்பி வைத்தவர்கள் ஆவர்.



குறித்த கடிதமானது, சர்வதேச நாணய நிதியத்தின் கொழும்பு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அக்கடிதம் இலங்கைக்கு விஜயம் செய்த சர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதிகள் குழுவிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு, இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு முறையான நிதிப் பொறுப்புக்கூறல் இல்லாமை மற்றும் குறுகிய நோக்குடைய அரசியல் கொள்கைகளை பின்பற்றி வருகின்றமை அடிப்படையில் காரணமாக அமைகின்றன.

இலங்கையானது, பல்லின,மத, மொழிகள் கொண்டதாகும். பிரித்தானியர்களின் ஆட்சியின்போது அவர்களால் இந்த விடயங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 1948 இல் சுதந்திரம் பெற்றதன் பின்னர் ஒற்றையாட்சி முறைமையின் கீழ் அதிகாரத்தின் கடிவாளத்தினை வைத்திருக்கும் சிங்கள பௌத்த பெரும்பான்மை சமூகமானது, சிங்கள-பௌத்த தேசியவாத நிதிக் கொள்கைகளையே பின்பற்றி வருகின்றது

வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக இருந்தபோதிலும் சிங்கள-பௌத்த தேசத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளே தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சியாக ஆட்சிப் பீடத்தில் இருந்த அரசாங்கங்கள் இவ்வாறு, பேரினவாதக் கொள்கைகளை பின்பற்றியதோடு, அவை மக்களின் நலன்களையும் நாட்டின் எதிர்காலத்தையும் கண்டுகொள்ளவில்லை.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூட பேரினவாதக் கோஷங்களின் அலையில் ஆட்சியைக் கைப்பற்றினார். பேரினவாத கோஷங்களை வெற்றிகரமாக பின்பற்றியதைத் தவிர அவருக்கும் அவரது ராஜபக்ஷ குடும்பத்தினருக்கும் இந்த நாட்டை வழி நடத்துவதற்கான எந்தவிதமான தகுதிகளும் இல்லை.

குறிப்பாக ராஜபக்ஷக்கள் இராணுவ செலவினங்களுக்காக பெருமளவில் கடன்களைப் பெற்றனர். போருக்கு அவ்வளவு தொகை தேவைப்பட்டதோ இல்லையோ, பெறப்பட்ட அனைத்து கடன்கள் மூலமும் கொள்வனவு செய்யப்பட்ட படையினரின் தளவாடங்களின் பெறுமதியில் தனிநபர்களுக்கு பெருமளவு தரகுப்பணம் கிடைத்துள்ளது.

2009இல் போர் முடிவடைந்த பின்னரும் படையினருக்கான கொள்னவுகள் தொடர்ந்ததோடு, வருடாந்த வரவு,செலவுத் திட்டத்தில் 15 முதல் 20 சதவீதம் தொடர்ச்சியாக ஒதுக்கப்பட்டும் இருந்தது. இலங்கையானது, படைகளைப் பராமரிப்பதற்கு செலவீனம் செய்யும் நாடுகளின் உலகப் பட்டியலில் 14 ஆவது இடத்தில் உள்ளது. படைகளைப் பராமரிப்பதற்காக தொடர்ச்சியாக கடன்களைப் பெற்றமையானது, தற்போதைய நெருக்கடிகளுக்கு பிரதான காரணங்களில் ஒன்றாகவுள்ளது.

அதேநேரம், சீனாவிடம் இருந்து இலங்கை பெருமளவில் கடன்களை பெற்றுக் கொண்டமையால் அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் அதனைச் சூழவுள்ள 15000ஏக்கர் நிலப் பரப்பை 99ஆண்டுகள் குத்தகைக்காக சீனாவிடத்திலேயே ஒப்படைக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

அதேநேரம், சீனாவின் நிதியில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் பல வருமானத்தை ஈட்டவில்லை. மாறாக, அந்த வெள்ளை யானைகளை பராமரிப்பது போன்ற நிலைமைக்கே இட்டுச் சென்றுள்ளது. இவ்வாறான நிலையில் இலங்கையானது தனது கொள்கைகளை முழுமையாக மாற்றியமைக்க வேண்டியது கட்டாயமாகும்.

குறிப்பாக, தற்போதைய நெருக்கடிளைச் சமாளிப்பதற்கு முதலீட்டாளர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. பாரியளவிலான முதலீடுகளை (20ம் பக்கம் பார்க்க)




SRI MUTHUMARI AMMAN PRASANNA
ASTROLOGER, PSYCHIC & SPIRITUALIST
Pandit: VISHNU MURTHY
Face Reading, Palm Reading
Horoscope Reading, Date of Birthh



SOLUTIONS & SUGGESTIONS:



100%
Guarantee

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.

Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob.
Vasthu Prob
Real Estate
and all other Problems




Private
&
Confidential

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போதுகனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள் கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வதிவிடப் பிரச்சனைகள், வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்ணூறு நாவூறு, கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

Specialist in Bringing Back Loved ones

OPEN 7 DAYS
10 AM - 8 PM

Call: 647-390-7388

379 Albion Rd, Unit 1A, Etobicoke, ON, M9W 3P4
Major Intersection: ALBION RD & ELMHURST DR.

# நாளை யூலை 9:- திருப்புமுனையை ஏற்படுத்துமா?

கோட்டா கோ கம போராட்டம் சற்று தொய்வடைந்து ராஜபக்சக்கள் மீண்டும் அரசியலுக்குள் வருவதற்கான நகர்வுகளை முன்னெடுத்திருக்கும் நிலையில் கொழும்பு அரசியலில் இரண்டு முக்கியமான காய்நகர்த்தல்கள் இடம் பெற்றுள்ளன.

முதலாவது நாளை 09 யூலை 2022 சனிக்கிழமை ஒன்பதாம் திகதி கொழும்பில் அரச எதிர்ப்புப் போராட்டங்கள் பல மட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கோட்டாபய ராஜபக்சவை பதவிதுறக்கச் செய்வதற்கான அழுத்தம் இதன் மூலமாக அதிகரிக்கவுள்ளது.

இரண்டாவது அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசு ஒன்றை அமைப்பதற்கு எதிர்க்கட்சிகள் அனைத்தையும் ஓரணியில் திரட்டி பொது நிலைப்பாட்டுக்குக் கொண்டு வருவதற்காக 06 யூலை 2022 புதன்கிழமை நடைபெற்ற பேச்சுக்களில் சாதகமான சில முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.





ஒரு புறம் அரசியல் ரீதியான நகர்வு. மறு புறம் மக்களை அணி திரட்டி போராட்டங்கள் மூலமாக அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கான நகர்வு. இரண்டும் கோட்டா – ரணில் அரசை வீட்டுக்கு அனுப்புவதையும், அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசு ஒன்றை அமைப்பதையும் இலக்காகக் கொண்டதாகவே இருக்கப் போகின்றது.

இதில் கவனிக்கத்தக்க மற்றொரு முக்கிய அம்சம் என்னவென்றால் கோட்டா கோ கமவில் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்ற இளைஞர்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாகவே புதன்கிழமை கொழும்பு பேச்சுக்கள் இடம்பெற்றன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பங்களிப்புடனேயே, சர்வக்கட்சி அரசு தொடர்பான அரசியல் மட்டத்திலான கலந்துரையாடல் முன்னெடுக்கப்படுகின்றது. நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் புதன் கிழமை மாலை நடைபெற்ற இந்த 2 ஆம் சுற்று பேச்சில், ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், சுதந்திரக்கட்சி, 43 ஆம் படையணி, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி மற்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்டவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வை பெற்றுக்கொடுக்கும் வகையில் சர்வக்கட்சி அரசொன்றை ஸ்தாபிப்பதற்கான நகர்வுகளை முன்னெடுப்பதற்கு குழுவொன்றை அமைப்பதற்கு இதன் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கட்சி தலைவர்களை உள்ளடக்கிய வகையில் அரசியல் நடவடிக்கை மற்றும் பொருளாதார விவகார குழுவொன்றை அமைப்பதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

சர்வக்கட்சி அரசுக்கான முதல் சுற்று பேச்சு செவ்வாய்கிழமை நடைபெற்றது. ஜே.வி.பிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் அக்கட்சி பங்கேற்கவில்லை. புதன்கிழமை சந்திப்பிலும் அக்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை.

எனினும், உரிய வேலைத்திட்டத்துடன், தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டு, சர்வக்கட்சி அரசொன்று ஸ்தாபிக்கப்படுமானால் வெளியில் இருந்து கொண்டு அதற்கு ஆதரவு வழங்க தயார் என அநுரகுமார திஸாநாயக்க கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அறிவித்தார்.

அதேவேளை எதிரணிகளின் பங்களிப்புடன் அமையும் சர்வக்கட்சி அரசுக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் உள்ள உறுப்பினர்களும் ஆதரவு வழங்குவார்கள் எனவும், இலகுவில் 113 ஐ திரட்டக்கூடியதாக இருக்கும் எனவும் எதிரணி உறுப்பினர்கள் நம்பிக்கை வெளியிட்டனர்.

இதேவேளையில், காலி முகத்திடலில் 'கோட்டா கோ கம' போராட்டத்தினை முன்னெடுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் எதிர்கட்சியின் அரசியல் பிரதிநிதிகள் குழுவிற்கும் இடையில் பொதுவான இணைக்கம் காணப்பட்டுள்ளதாக சிங்கள இணைத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

போராட்டத்தை வெல்லும் கருத்தொற்றுமை' என்ற பெயரில் கொழும்பில் நேற்று புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டுப் பொது மாநாட்டில் சஜித் பிரேமதாச, சம்பிக்க ரணவக்க, மைத்திரிபால சிறிசேன, தயாசிறி ஜயசேகர, அனுர பிரியதர்சன யாப்பா, மனோ கணேசன் உள்ளிட்ட எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஓரணியில் அமர்ந்து ஒன்றிணைந்து பொதுவான ஒருமித்த கருத்துக்காக போராட இணங்கியுள்ளது. போராட்டக்காரர்கள் சார்பில் நான்கு விடயங்கள் அடங்கிய யோசனை முன் வைக்கப்பட்டு ஒருமித்த கருத்து நிறைவேற்றப்பட்டு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அந்த நான்கு விடயங்கள் இவை தான்:

1. கோட்டாபய ராஜபக்ச உடனடியாக நிறைவேற்று அதிகார அரச தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டும்.

2. ரணில் விக்ரமசிங்க, ராஜபக்ச ஆட்சி மற்றும் அரசு உடனடியாக பதவி விலக வேண்டும்.

3. மக்கள் போராட்டத்தின் பொருளாதார, சமூக, அரசியல் நோக்கங்களுக்கும், நோக்கங்களுக்கும் ஏற்ப இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்பட வேண்டும். ஊழல் குற்றச்சாட்டுக்களுக்குள்ளான எவரும் அதில் பங்கேற்கக் கூடாது, பொதுமக்களின் பிரச்சனைகளுக்கு ஓராண்டுக்குள் தீர்வு காணப்பட வேண்டும்

4. 19ஆவது அரசமைப்பின் திருத்தத்தின் சாதகமான மற்றும் பாதகமான அம்சங்களைக் கண்டறிந்து நிறைவேற்று அதிகாரங்களைக் குறைக்கும் 19 பிளஸ் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். இந்த நடவடிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு ஜஜீலை 09 ஆம் நாளுக்கு முன்னர் பதவி விலகாது விட்டால் அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து தொடர்ச்சியான பொதுப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கும் நிலையில் சனிக்கிழமை இலங்கையில் போராட்டம் நிறைந்த திருப்புமுனையை ஏற்படுத்தும் நாளாக அமையலாம். இதனால், தலைநகர் கொழும்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவையும் அரசாங்கத்தையும் பாதுகாக்கும் வகையில் முப்படைகளும் குவிக்கப்படலாம். அரசாங்கமும் தயாராகவே இருக்கின்றது.

மே 9 மக்கள் போராட்டத்தையடுத்து பிரதமர் பதவியை இராஜினாமா செய்த மகிந்த ராஜபக்ச தலைமறைவானார்.

ஜீன் 9 பசில் ராஜபக்ச எம்.பி. பதவியை ராஜினாமா செய்து அரசியலிலிருந்து ஒதுங்குவதாக அறிவிப்பதார்!

அந்த வகையில் ஜீலை 9 திருப்புமுனையை ஏற்படுத்துமா? கோட்டாபய வீடு செல்வாரா? கொழும்பு களைகட்டுகின்றது. பொறுத்திருந்து பார்ப்போம்!



# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! யூலை மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**

**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**

**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**

**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**

**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**

**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**

**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**

**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

02 யூலை 2022 முதல் 08 யூலை 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ் வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பத்மரூபன் கந்தையா

யாழ்.அல்வாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பத்மரூபன் கந்தையா அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 07 யூலை 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பத்மரூபன் கந்தையா அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இளையபிள்ளை கனகரெத்தினம்

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையைப் வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இளையபிள்ளை கனகரெத்தினம் அவர்களது 12வது ஆண்டு நினைவு நாள் 11 யூலை 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி இளையபிள்ளை கனகரெத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி குலசேகரம்பிள்ளை மங்கையற்கரசி

புங்குடுதீவு 8ம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மங்கையற்கரசி குலசேகரம்பிள்ளை அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவுநாள் 12 யூலை 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி மங்கையற்கரசி குலசேகரம்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடைய குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு ஜெயகணேசா கெங்காதரன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு ஜெயகணேசா கெங்காதரன் அவர்களின் ஏழாவது ஆண்டு நினைவுநாள் 09 யூலை 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு ஜெயகணேசா கெங்காதரன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர், நண்பர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கிருபாமலர் ஜனார்த்தனகுமார்

இளவாலை கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருபாமலர் ஜனார்த்தனகுமார் அவர்களது 9வது ஆண்டு நினைவு நாள் 12 யூலை 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி கிருபாமலர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சரோஜினிதேவி ஞானசேகர்

சுருவிலைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது முதலாம் ஆண்டு நினைவு நாள் 13 யூலை 2022 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




02 யூலை 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் சோபன் ஜெயமோகனின் பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் சோபன் ஜெயமோகன் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




02 யூலை 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு வைரமுத்து சாமுவேல் செல்வரெத்தினம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு வைரமுத்து சாமுவேல் செல்வரெத்தினம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.





03 யூலை 202 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி றோசிற்றா அன்ரனி அவர்களது 50வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி றோசிற்றா அன்ரனி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




04 யூலை 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி செரினா ஜெயகிருஷ்ணா, செல்வி அலினா ஜெயகிருஷ்ணா சகோதரிகள் தமது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




07 யூலை 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி மதுரா சதானந்தனின் பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி மதுரா சதானந்தன் அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




07 யூலை 2022 வியாழக்கிழமை யாழ்.அல்வாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பத்மரூபன் கந்தையா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




08 யூலை 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சிவகுமார் தனியா தம்பதிகளின் செல்வப்புதல்வி தருணிகா சிவகுமாரின் 7வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி தருணிகா தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




30 யூன் 2022 வியாழக்கிழமை பிரம்டன் கனடாவில் வசிக்கும் திரு மதியழகன் வடிவேலு அவர்களது 60வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு மதியழகன் அவர்கள் தனது குடும்பத்தினர், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




01 யூலை 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி மாதுமை வைத்தியநாதன் அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து கனடா திருநாளை முன்னிட்டு அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

## 90வது பிறந்தநாள் நல்வாழ்த்து

மனம் நிறைந்த மகிழ்ச்சி
மலர்ந்து அழகூட்ட
வாழ்வின் அழகெல்லாம்
வசந்தமாய் வரவேற்க
அகவவ 90 பிறந்து சிரிக்கிறது.
சுந்தரனாய் நிற்கும்
சின்னத்தம்பி மகன்.
நாகம்மா பெற்றெடுத்த
நல்ல மகன். நயினை மகன்.
பல்லாண்டு வாழ்க!
நூற்றாண்டு காண்க!
பாக்கியத்தின் துவைவர் இவர்
பாசமிகு தந்தையிவர்
பேரக் குழந்தைகளை
அரவணைக்கும் பாட்டனிவர்
மனிதம் குடி கொண்ட
மாமா எனும் மகான் இவர்.
பிறந்த நாள் காணும்
பெரியவரை வாழ்த்துகின்றோம்.
சிறந்த இந் நாளில்
சுந்தரனைப் போற்றுகின்றோம்.
அகவை அழகூட்ட
அம்மன் அருளோடு
நூற்றாண்டு வாழ்க!
பல்லாண்டு வாழ்க!




## திரு சின்னத்தம்பி சுந்தரலிங்கம் அவர்கள்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு சின்னத்தம்பி சுந்தரலிங்கம் அவர்களது 90வது பிறந்த நன்நாள் 05 யூலை 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் தனது இல்லத்தில் பிறந்த நன்நாளை மிக எளிமையாகக் கொண்டாடிய பெரியவர் திரு சின்னத்தம்பி சுந்தரலிங்கம் அவர்கள் 10 யூலை 2022 ஞாயிற்றுக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கும் சிறப்பு உணவும் குளிர்பானங்களும் வழங்கவுள்ளார். அகவை 90 காணும் திரு சின்னத்தம்பி சுந்தரலிங்கம் அவர்களை நூற்றாண்டு காலம் வாழ வேண்டுமென வாழ்த்தும் அவரது மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

# வீடு மற்றும் வாகன காப்புறுதி
# HOME & AUTO INSURANCE

வீடு — HOME
வாகனம் — AUTO
மோட்டர் சைக்கிள் — MOTOR CYCLE
படகு — BOAT
கனரக வாகனம் — TRAILER

காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்



TR
FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!
**THUSHANTHAN RAVINDRAN**
**647-401-2653**



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

**Serving the Tamil Community**
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

உ

ஓம் சக்தி

# ஜெயதுர்க்கா தேவஸ்தானம் - மிசிசாகா

## சுபகிருது வருட மகோற்சவ விஞ்ஞாபனம்

விரவிநின்றொளிரும் வீரமும் துணிவும் மேதினி வாழ்பவர்க் கருளி
பறந்திடு விமானம் பதிந்து பின் இறங்கி பாங்குடன் ஏறிடும் வகையில்
தரைவழி கொண்ட மிசிசாகா பதியில் தான் நிலைத் தெம் மனம் கொள்ளும்
செருக்கழித்தாண்டு சீரருள்புரியும் ஜெயதுர்க்கை அம்பிகைத் தாயே.



**கொடியேற்றம்**
26-06-2022
ஞாயிறு

**மஞ்சம்**
05-07-2022
செவ்வாய்

**சப்பறம்**
08-07-2022
வெள்ளி

**தேர்**
09-07-2022
சனி

**தீர்த்தம்**
10-07-2022
ஞாயிறு

**பூங்காவனம்**
12-07-2022
செவ்வாய்

**அம்பிகை அடியார்களே!**

சகல வளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற கனடா நன்னாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஒன்ராரியோ மாநில மிசிசாகா மாநகரில் திருக்கோவில் கொண்டெழுந்தருளி வேண்டுவோர் வேண்டுவதை ஈய்ந்தருளும் ஜெயதுர்க்கா அம்பாளுக்கு மகோற்சவம் நிகழ திருவருள்கூடியுள்ளது. சுபகிருது வருடம் ஆனித் திங்கள் 12ம் நாள் (26-06-2022) கார்த்திகை நட்சத்திரமும், சித்த யோகமும் கூடியுள்ள நன்நாள் ஞாயிறன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனி மாதம் 26ம் நாள் (10-07-2022) ஞாயிறன்று தீர்த்த உற்சவத்துடன் 15 தினங்கள் திருவிழாக்கள் கலை நிகழ்ச்சிகளுடன் இனிதே நிகழ ஏற்பாடாகியுள்ளது. அன்பர்கள், அடியார்கள் அனைவரும் பகலும் இரவும் ஆலயத்திற்கு வருகை தந்து திருவிழா வழிபாடுகளில் கலந்து அம்பாள் அருள்பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

**1808 Drew Road, Mississauga, Ontario L5S 1J6**
**Telephone: 905-612-1856 • www.jeyadhurgatemple.com**

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner), Scarborough ON M1B 3C6**
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases





Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth






**2338 Hurontario St., Unit 100A, Mississauga, ON L5B 1N1**

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Servicing clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph

- ❑ **Personal Tax**
- ❑ **Corporate Tax**
- ❑ **Book Keeping & Accounting**
- ❑ **Payroll Services**
- ❑ **GST/HST Filing**
- ❑ **Corporate Services**
- ❑ **Business Startup**
- ❑ **Financial Planning**



# Gayatiri Thavan
Tel: **289.569.0169** • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
**www.taxcentric.ca**

# பெற்றோல் தாகம்!



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

நாடு தெருவில் எரிபொருள் வரிசையில் நிற்கிறது. இலங்கைத்தீவின் நவீன வரலாற்றில் இத்துணை நீண்ட எரிபொருள் வரிசைகள் முன்னெப் பொழுதும் காணப்படவில்லை.நாடு ஏன் இப்படி பெட்ரோல் மீது தாகமுடையதாக மாறியது? அதிகமாக மோட்டார் இயந்திர வாகனங்களில் தங்கியிருப்பதுதான் காரணமா? நாங்கள் அதிகமதிகம் இயந்திரங்களில் தங்கி வாழ்கின்றோமா?

தமிழ் மக்களைப் பொறுத்தவரை பொருட்களுக்காக வரிசைகளில் காத்திருப்பது ஒரு புதிய அனுபவமல்ல. ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஐந்தாம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற மகா இடப்பெயர்வோடு ஒப்பிடுகையில் இந்த வரிசைகள் யாவும் ஒரு பொருட்டேயல்ல. மிகக் குறுகிய காலத்தில், தப்பிச் செல்ல இருந்த ஒரே பிரதான சாலை ஊடாக, கைதடிப் பாலம், நாவற்குழிப் பாலம் ஆகிய இரண்டு பாலங்களைக் கடந்து தென்மராட்சிப் போக வேண்டியிருந்தது. அப்பொழுது முழு வலிகாமமும் தெருவில் நின்றது. அந்தக் காட்சியானது பருந்துப் பார்வைக்கு ஒரு காயப்பட்ட மலைப்பாம்பு ஊர்ந்து ஊர்ந்து நகர்வதைப் போன்று இருந்தது. கிட்டத்தட்ட இரண்டு நாட்களுக்கு மேல் அந்த இடப்பெயர்வு வரிசை யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி வரையிலும் தொடர்ச்சியாக நின்றது. வழி நெடுக முதியோர் இறந்தார்கள். நோயாளிகள் இறந்தார்கள். முதியோரும் குழந்தைகளும் கைவிடப்படார்கள்.கால்நடைகள் கைவிடப்பட்டன. தாகமான பொழுதுகளில் மழை நீரை சேகரித்து அருந்தியவர்கள் உண்டு. கண்டி வீதியில் அப்படியோரு நெரிசலான வரிசை அதற்கு முன்னரும் காணப்படவில்லை. அதற்கு பின்னரும் காணப்பட்டதில்லை.

அது வீதியோரங்களில் மட்டும் காணப்பட்ட வரிசை அல்ல. வீதி முழுவதையும் அடைத்துக் கொண்டிருந்த வரிசை. வாகனங்களும் மனிதர்களும் யார் யாரை முந்துவது என்று நெரித்துக் கொண்டு நின்ற ஒரு வரிசை. போர்க்காலத்தில் எல்லாம் மகா இடப் பெயர்வுகளின் போதும் அவ்வாறான வரிசைகள் காணப்பட்டன. குறிப்பாக இறுதிக்கட்டப் போரில் அது போன்ற பல ஜனத்திரள் வரிசைகளை வன்னி கிழக்கில் காணமுடிந்தது. இந்த வரிசைகளில் இறுதியானது நலன்புரி நிலையத்தில் சாப்பாட்டுக்கும் தண்ணிக்குமாக நின்ற வரிசைகளும், மலம் கழிப்பதற்காக நின்ற வரிசைகளும் தான்.

இறுதிக்கட்டப் போரின் இறுதி நாட்களில் கைகளை உயரத் தூக்கியபடி நிர்வாணமாக சென்ற அவமானகரமான தோல்விகரமான வரிசைகளோடு ஒப்பிடுகையில் இப்போது நிற்கும் வரிசைகள் அப்படி ஒன்றும் கொடுமையானவை அல்ல. எனவே தமிழ் மக்களைப் பொறுத்தவரை இது அதிர்ச்சியூட்டும் அனுபவம் அல்ல.

இதற்கு முன்பு தமிழ்மக்கள் யார் யாருக்காகவோ, எதற்காகவோவெல்லாம் காத்திருந்திருக்கிறார்கள். முதலாம் கட்ட ஈழப் போரில் இந்தியாவுக்காக காத்திருந்தார்கள். இறுதிக் கட்டப் போரில் ஐநாவுக்காக, அமெரிக்காவுக்காக, வணங்காமண் கப்பலுக்காக காத்திருந்தார்கள்.

2009-க்குப் பின்னிருந்து ஐநாவுக்காகக் காத்திருக்கிறார்கள்.காத்திருப்பது தமிழ் மக்களுக்கு புதியது அல்ல.ஆனால் பெட்ரோல் இருக்கா? இல்லையா? என்று தெரியாமல் காத்திருப்பதும், பெட்ரோல் பவுசரைக் கண்டதும் தேங்காய் உடைத்துக் கொண்டாடுவதும் கொஞ்சம் கூடித்தான் போச்சு.

தென்னிலங்கையில் பெட்ரோலுக்காக காத்திருக்கும் சிங்கள மக்கள் மத்தியில் போலீசாருடன் மோதல் வருகிறது. போலீசுக்கும் ஆமிக்கும் இடையே முறுகல் வருகிறது. ஆனாலும் முடிவில் போலீஸ் தான் நிலைமைகளைக் கையாளுகின்றது. ஆனால் வடக்கில் விசுவமடுவில் இராணுவம் பொதுமக்களைக் கையாண்டிருக்கிறது. அதே சமயம் தெற்கிலோ ஒரு ராணுவ உயர் அதிகாரியை ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொது மக்கள் கூக்குரலிட்டுத் துரத்துகிறார்கள்.



எல்லா எரிபொருள் வரிசைகளிலும் சலிப்பு,கோபம், இயலாமை,அவமானம் போன்ற பல்வேறு எதிர்மறை உணர்வுகளின் கலவையான ஒரு சூழலைக் காண முடியும். குறிப்பாக படித்த நடுத்தர வர்க்கத்தை சேர்ந்தவர்கள் பலருக்கு அது அவமானகரமான அனுபவமாக இருக்கிறது. முன்னெப்பொழுதும் முகம் பார்த்து கதைத்திராத எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியரிடம் இரந்து நிற்பது போன்ற ஒரு நிலை. சமூகம் அதன் இயல்பு நிலையை இழந்து விட்டது. இயல்பான ஒரு சமூகக்கட்டமைப்பில் அத்தியாவசிய தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுண்டு. ஆனால் இயல்பற்ற ஒரு சூழலில், ஒரனர்த்த காலத்தில், ஒரு பொது இடருக்கு முன் எல்லாருமே சமம் என்று பொதுமக்கள் கருதுகிறார்கள். இதில் யாருக்காவது முன்னுரிமை வழங்கப்பட்டால் அவர்கள் சீற்றமடைகிறார்கள்.

அதனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை நிரப்ப முற்படும் அரசு ஊழியர்களோடு முட்டுப்படுகிறார்கள். குறிப்பாக சுகாதாரத் துறைசார் ஊழியர்கள், பரீட்சை வினாத்தாள்களை திருத்தும் பணிகளுக்காகவும், அடுத்த நாள் பாடசாலைக்கு போவதற்காகவும் எரிபொருளை நிரப்ப வந்த கல்விச் சமூகத்தை சேர்ந்தவர்கள் போன்றவர்கள் அவமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் ஒரு பதில் அதிபர் வீதியில் குந்தியிருந்து போராட்டமே நடத்தியிருக்கிறார். அதிபர்கள் ஆசிரியர்கள் அவமதிக்கப்படும் ஒரு நிலைமை வந்தால் தாங்கள் கற்பித்தல் செயற்பாடுகளில் இருந்து விலகி நிற்கப் போவதாக ஆசிரியர் சங்கம் ஒன்று எச்சரித்துள்ளது.

அதே சமயம் வரிசைகளுக்குள் பதுங்கும் கள்ளச்சந்தை வியாபாரிகளைக் குறித்தும் குற்றச்சாட்டுக்கள் உண்டு. ஒரு சிறு குழுவினர் வரிசைகளுக்குள் வேண்டுமென்று குழப்பத்தை விளைவிப்பதாகவும், ஒரு பகுதியினர் திரும்பத் திரும்ப எரிபொருளை நிரப்புவதாகவும், கள்ளச் சந்தையில் ஒரு லீற்றர் பெட்ரோல் ஆயிரம் ரூபாய்க்கு மேல் விற்பதாகவும் குற்றச்சாட்டுகள் உண்டு. இவ்வாறு வரிசைகளில் நின்று அடாவடித்தனம் செய்பவர்களுக்கும் எரிபொருள் நிரப்பு நிலைய முதலாளிகளுக்கும் அல்லது ஊழியர்களுக்கும் இடையே ஏதோ ஒரு புரிந்துணர்வு உண்டு என்ற ஒரு சந்தேகம் பரவலாக உண்டு. சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வேண்டுமென்றே ரகளைகள் ஏற்படுத்தப்பட்டு அதன் விளைவாக போலீசைக் கூப்பிட்டு வினியோகம் நிறுத்தப்படுவதாகவும், வரிசையில் நிற்கும் மக்களை கலைப்பதற்கு இது ஒரு சாட்டாக சில எரிபொருள் நிலையங்கள் பயன்படுத்துகின்றன என்றும் சமூக வலைத்தளங்களில் பரவலாக குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது.

எனினும், மட்டக்களப்பு நகரில் உள்ள ஐ.ஓ.சி.எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் பெற்றோல் விலை கூடிய பின்னரும் பெற்றோலை பழைய விலைக்கே விற்றுள்ளார். மேலும் தேவை அடிப்படையில் எரிபொருளை சீராக விநியோகித்துள்ளார். தமிழ்ப் பகுதிகளில் அவர் ஒரு முன்னுதாரணமாகப் பார்க்கப்படுகிறார்.

இக்கட்டுரையை நான் திருத்தி எழுதும் போது பெற்றோல் வரிசைக்குப் பதிலாக டோக்கன் வரிசைகள் வந்து விட்டன. எதிர்காலத்தில் டோக்கன் எடுப்பதற்கும் டோக்கன் எடுக்கவேண்டி வருமா என்று முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ஒருவர் கேட்டிருக்கிறார்

வரிசையில் நிற்பதற்கு நேரம் கிடைக்காத ஒரு பகுதியினர் வித்தியாசமான உத்திகளைப் பயன்படுத்துகிறார்கள். திருகோணமலையில் வாகனத்திற்கு பதிலாக ஒரு கதிரை வைக்கப்பட்டிருந்தது. அக்கதிரையில் வாகனத்தின் இலக்கம் எழுதப்பட்ட மட்டை கொளுவப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியில் ஒரு சலவை இயந்திரத்தின் வெளிக்கோது வைக்கப்பட்டிருந்தது. அதிலும் வாகன இலக்கம் எழுதப்பட்ட மட்டை தொங்கியது. வாகன வரிசையில் சம்பளத்துக்காக நிற்பதற்கும் ஆட்கள் உண்டு. அது போல எரிபொருளை நிரப்புவதற்கென்று வாகனங்கள் வாடகைக்கு விடப்படுகின்றன.ஒரு வாகனத்துக்கு ஒரு நாளைக்கு 5000 ரூபாய் அறவிடப்படுகிறது. அதில் எரிபொருளை நிரப்பியபின் அதை உறிஞ்சி எடுத்துவிட்டு வாகனம் திருப்பிக் கொடுக்கப்படும்.

இவ்வாறாக எரிபொருள் வரிசை எனப்படுவது சிலருக்கு அவமானம் அல்லது துன்பம். வேறு சிலருக்கு அது வியாபாரம். இன்னும் சிலருக்கு அது ஒரு தொழில். எனினும் ஒரு பகுதியினருக்கு அது கொண்டாட்டமாகவும் இருக்கிறது.

அண்மையில் ஒரு முகநூல் பதிவை பார்த்தேன். அதில் படித்த நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் கார்களுக்கு எரிபொருளை நிரப்புவதற்காக வரிசையாக நின்றபொழுது அந்த நேரத்தை எப்படி குதூகலமாக கொண்டாட்டமாக மாற்றினார்கள் என்று அந்த நண்பர் விவரித்து இருந்தார். சலிப்பூட்டும் அவமானகரமான அந்தக் காத்திருப்பை எப்படி மது மற்றும் சிற்றுண்டிகள் மூலம் கலகலப்பான பம்பலான ஒரு கொண்டாட்டமாக மாற்ற முடிந்தது என்றும் அவர் விவரித்திருந்தார். இடுக்கண் வருங்கால் நகுக.

படித்த நடுத்தர வர்க்கம் மட்டுமல்ல, கீழ் மத்தியதர வர்க்கத்தை சேர்ந்தவர்களும் தங்களுடைய நிதிக் கொள்ளளவுக்கு ஏற்ப காத்திருப்பை ஒரு கொண்டாட்டமாக மாற்றுகிறார்கள். தங்களுக்கிடையே காசைப்(22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com



றொரன்றோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

11 யூலை 2022 திங்கள்- பிரதோஷ விரதம்

16 யூலை 2022 சனி- ஆடிப்பிறப்பு

உபயம்:- பா.ரகு குடும்பம்

25 யூலை 2022 திங்கள்- பிரதோஷ விரதம்

27 யூலை 2022 புதன்- ஆடி அமாவாசை விரதம்

ஆடி அமாவாசையன்று காலை 7.00 மணியில் இருந்து ஆலயத்தில்
பிதாவுக்கும் முன்னோர்க்கும் பிதிர்க்கடன் செய்தவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

**இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்**





# Amma Pawn Broker

# அம்மா தங்கநகை அடைவு மாடம்



கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

**1.0% முதல் 1.5% வரை**

அதிரடி சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8

ammapawnbroker@gmail.com

416-757-0034
416-994-3861

# கொழும்பு வந்த இந்திய உயர்குழு இலங்கைக்குக் கொடுத்த அதிர்ச்சி!

புதுடில்லியிலிருந்து கடந்த வியாழக்கிழமை சூறாவழி விஜயமாக கொழும்பு வந்த நான்கு உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட இந்தியத் தூதுக்குழு கொடுத்த அதிர்ச்சி இலங்கை அரசை சுனாமியாகத் தாக்கியிருக்கின்றது. எரிபொருட்களை பெறுவதற்கு மற்றொரு கடனுதவியை இந்தியாவிடமிருந்து இலங்கை எதிர்பார்த்திருந்த நிலையில், அதற்குப் பதிலாக இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட இந்தியத் திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துங்கள் என இந்திய அதிகாரிகள் கடும் தொனியில் கூறி விட்டு தாம் வந்த விமானத்திலேயே ஏறிச்சென்று விட்டார்கள்.

தனியான விமானத்தில் வந்து சுமார் மூன்று மணி நேரம் மட்டுமே கொழும்பில் தங்கியிருந்த இந்திய உயர் குழு, ஜனாதிபதியையும் பிரதமரையும் மட்டுமே சந்தித்தது. எரிபொருள் இறக்குமதிக்கு இந்தியாவின் கடனுதவியை எதிர்பார்ப்பதற்கு முன்னதாக ஏற்கனவே கைச்சாத்திடப்பட்ட இந்தியத் திட்டங்களை நிறைவேற்றுங்கள் என அவர்கள் கடுமையாகச் சொன்னதையடுத்தே மூன்று விடயங்களை அவசரமாக இலங்கை செய்தது.

ஒன்று – ஜீலை 10 ஆம் திகதி வரை அத்தியவசிய சேவைகளுக்கு மட்டுமே எரிபொருள் வழங்கப்படும் என அறிவித்தது. நகரப்புற பாடசாலைகளும் இரண்டு வாரங்களுக்கு மூடப்பட்டன. .தன்மூலம் இலங்கை பெருமளவுக்கு முடங்கிப் போயிருக்கின்றது. ஜீலை 10 என்ற காலை எல்லை மேலும் நீடிக்கப் படுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

இரண்டு அமைச்சர் ஒருவரும் அதிகாரிகள் சிலரும் அவசரமாக ரஸ்யாவுக்கு அனுப்பப்பட்டார்கள். உக்ரேனுடனான போர் காரணமாக ரஸ்யா மீது விதிக்கப்பட்ட தடையால் ரஸ்யாவில் உற்பத்தியாகும் எரிபொருள் அந்த நாட்டில் பெருமளவுக்கு தேங்கிப் போயுள்ளது. குறைந்த விலைக்கு அவற்றை விலைபேசி வாங்குவதற்கே இரு அமைச்சர்களும் அவசரமாக அனுப்பப்பட்டுள்ளார்கள்.

மூன்று இரண்டு அமைச்சர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். இதில் ஒருவர் முஸ்லிம் அமைச்சர். முஸ்லிம் அமைச்சர் ஒருவரையும் இணைத்து அனுப்பியதன் பின்னணி வாசகர்களுக்கு புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னர் முஸ்லிம்கள் .லங்கையில் எவ்வாறு நடத்தப்பட்டனர் என்பது அனைவருக்கும் தெரியும். இந்த நிலையில் முஸ்லிம் அமைச்சர் ஒருவரையும் இணைத்து அனுப்பினால் தான் முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெறமுடியும் என கோட்டாபய அரசு கருதியிருக்கலாம்.

அதேவேளையில் கட்டாருக்கு தான் நேரடியாகச் செல்வதற்கு ஜனாதிபதியும் திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியா கொடுத்த அதிர்ச்சியையடுத்தே இந்த நகர்வுகளை இலங்கை அரசு அவசரமாக முன்னெடுத்திருக்கின்றது. இந்திய வெளிவிவகாரச் செயலாளர் வினய் கௌட்ரா தலைமையிலான இந்தியத் தூதுக்குழுவில் இந்திய நிதி அமைச்சின் உயர் அதிகாரிகளும் அடங்கியிருந்தனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை இவர்கள் தனித்தனியாக சந்தித்துப் பேசினார்கள். ந்தியா முன்னெடுக்கக்கூடிய புதிய திட்டங்கள் தொடர்பாகவும் இவர்கள் பேசியுள்ளார்கள்.

எரி பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக மற்றொரு கடனை இந்தியாவிடம் கேட்பதற்கு இலங்கை தயாராக இருந்தது. ஆனால் அதற்கு இடமளிக்காமல் தமது தேவைகள் என்ன என்பதை மட்டும் சொல்லி விட்டு இந்திய அதிகாரிகள் புறப்பட்டனர்.

கடந்த சில மாதங்களாக இந்திய கடனுதவித் திட்டங்களின் மூலமாகவே இலங்கை தனக்குத் தேவையான எரி பொருட்களை வாங்கி வந்தது. ஆனால் இந்தியாவின் நலன்களைப் பேணும் திட்டங்கள் கிடப்பில் போட்டபடி உள்ளன. இந்தப் பின்னணியில் அதனை 'நினைவுட்டவே' தனி விமானத்தில் நான்கு உயர் அதிகாரிகளை புதுடில்லி அவசரமாக கொழும்புக்கு அனுப்பியது.

மற்றொரு எரிபொருள் கடனுக்காக இந்தியாவை எதிர்பார்த்திருந்த கொழும்புக்கு இதன் மூலமாக தெளிவான



செய்தி ஒன்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது, இந்தியாவின் திட்டங்களை நிறைவேற்றாத நிலையில் மற்றொரு கடனுதவி கிடைக்கப்போவதில்லை என்பது தான் அந்தச் செய்தி.

அந்தச் செய்தியைத் தொடர்ந்தே இலங்கை அமைச்சர்கள் ரஸ்யா, மத்திய கிழக்கு என ஓடத் தொடங்கியுள்ளார்கள். இதன்படி இன்னும் மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குள் எரி பொருள் வரப்போவதில்லை. அடுத்து வரும் வாரங்களில் .லங்கை முழுமையாக முடங்குவதும், அத்தியவசியப் பொருட்களின் விலை உச்சத்துக்குச் செல்வதும் தவிர்க்க முடியாததாகி விடும்.

இந்தியாவுக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்ட மூன்று திட்டங்கள் இன்னும் செயற்படுத்தப்படாமல் உள்ளன.

முதலாவது மன்னார் – பூநகரி காற்றாலை மின்சக்தித் திட்டம். இது இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

இரண்டாவது கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையம். துவும் அதானி நிறுவனத்துக்கே வழங்கப்பட்டது.

மூன்றாவது திருமலை சம்பூரில் சூரிய சக்தி மின்திட்டம். இதுவும் இந்தியாவின் மற்றொரு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

இவற்றை விட திருமலையிலுள்ள எண்ணெய்த் தாங்கிகளை கூட்டாக அபிவிருத்தி செய்வதற்காக ஒப்பந்தம் ஒன்றும் கடந்த ஜனவரியில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கைச் சாத்திடப்பட்டது.

இந்திய கடனுவதியுடனான இரண்டு எரிபொருள் கப்பலகள் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கொழும்புக்கு வந்திருந்தன. அவை தான் இந்தியக் கடனுதவியுடனான இறுதிக்கப்பல்கள். இதற்கு மேலாக கடனை எதிர்பார்க்காதீர்கள் என்பது தான் இந்தியத் தூதுக்குழு தெரிவித்துச் சென்ற செய்தி!

இந்திய உயர்குழு கொழும்பு வருவதற்கு முதல் நாள் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதர் ரணில் விக்கிரமசிங்க முக்கியமான ஒரு தகவலை வெளியிட்டிருந்தார். இந்திய உடனுதவித் திட்டத்தின் அடிப்படையில் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியாவிடமிருந்து இலங்கை பெற்றிருக்கின்றது. இந்தியாவிடமிருந்து மேலும் கடனுதவிகளை நாம் கேட்டிருக்கின்றோம். ஆனால் இந்த வகையில் தொடர்ந்தும் எமக்கு ஆதரவளிக்கக்கூடிய நிலையில் இந்தியா இல்லை. அவர்களுடைய உதவிகள் வரையறுக்கப்பட்டவையாக இருந்தாலும், இந்தக் கடன்களை மீளச் செலுத்துவதற்கான திட்டம் எம்மிடம் இருக்க வேண்டும். இவை நன்கொடைகள் அல்ல' என்பது தான் பிரதமர் தெரிவித்த கருத்து.

இதன் பின்னரும் இந்தியாவுக்கான இலங்கைத்தூதுவர் மிலிந்த மொரகொட, இந்திய பெற்றோலிய துறை அமைச்சரை புதுடில்லியில் சந்தித்துப் பேசியிருக்கின்றார். ஆனால், அவசரத் தேவைக்கான எரிபொருட்களைப் பெற்றுக் கொள்வது குறித்தே இதன் போது முக்கியமாக பேசப்பட்டது.

இலங்கை எதிர்பார்க்கும் எரிபொருள் கிடைப்பதற்கு முன்னர் அவசரத் தேவைகளைச் சமாளிப்பதற்கு கையிருப்பில் உள்ள எரிபொருள் போதவில்லை என்றால் இந்திய உதவியைப் பெறுவது தொடர்பாகவே இதன்போது பேசப்பட்டது.

இலங்கையைப் பொறுத்த வரையில் இந்தியா ஒன்று தான் அதற்கு உதவக்கூடிய ஒரே அண்டைநாடு. சீனாவைப் பொறுத்தவரையில் மேலும் அதிகளவு கடனுதவிகளை இலங்கைக்கு வழங்கும் நிலையில் இல்லை.

இந்த சந்தர்ப்பத்தை இலங்கை மீதான தனது பிடியை இறுக்குவதற்கு இந்தியா பயன்படுத்துகின்றது. வடக்குடனான தொடர்பை அதிகரிப்பதன் மூலமாக இதனைச் செய்வது தான் இந்தியாவின் திட்டம். அதற்காகத் தான் இலங்கை அரசாங்கம் நிரந்தரமாக மூடுவதற்கு திட்டமிட்டிருந்த பலாலி விமான நிலையத்தை திறக்கச் செய்வதில் இந்தியா வெற்றி பெற்றது. அடுத்ததாக காங்கேசன்முறை, மன்னார் துறைமுகங்களிலிருந்து இந்தியாவின் காரைக்கால், தூத்துக்குடி போன்ற துறைமுகங்களுக்கு கப்பல் சேவை ஆரம்பமாகவுள்ளது.

அதேவேளையில், மன்னார்–பூநகரி காற்றாலை மின்திட்டம், சம்பூர் மின் சாரத் திட்டம், கொழும்பு துறைமுக மேற்கு முனையம் என்பவற்றையும் உடனடியாக ஆரம்பிக்க ந்தியா திட்டமிடுகின்றது. அதற்கான காய்நகர்த்தல்களே இப்போது முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், சிங்களவர்கள் மத்தியில் காணப்படும் ந்திய எதிர்ப்பு என்பதைப் பயன்படுத்துவதற்கு ஜே.வி.பி. உட்பட எதிரணிகள் சில தயாராகவுள்ளன. அடுத்து வரும் வாரங்களில் அதனையும் பார்க்கக்கூடியதாக இருக்கலாம்.

**கட்டுரையாளர்:**
ஈழநாட்டிற்காக யாழில் இருந்து
– பார்த்தீபன் –





# ரஷ்யா:- வர்மமா? சாபமா?



கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -

இலங்கையில் எரிபொருள் நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில், ரஷ்யாவை நோக்கித் திரும்பியிருக்கிறது அரசாங்கம். கடந்த செவ்வாய்க் கிழமை கொழும்பில் உள்ள ரஷ்ய தூதுவரை, அழைத்துப் பேச்சு நடத்தியிருந்தார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அதற்கு அடுத்தநாள் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உதவி கோரியிருக்கிறார் அவர்.

உக்ரேன் மீதான போரை அடுத்து, ரஷ்யா மீது மேற்குலக நாடுகள் தொடர் அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

இந்தப் போரினால் உலகத்துக்கு கோதுமை, போன்ற தானியங்களையும், எண்ணெய் வித்துக்களையும் எரிபொருளையும் அதிகளவில் வழங்கிக் கொண்டிருந்த இரண்டு தேசங்களும், அழிவுகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன.

ஆனாலும், உக்ரேன் மீதான போரை கைவிடுவதில்லை என்று பிடிவாதம் கொண்டிருக்கிறார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்.

உக்ரேன் இலகுவாக வீழ்ந்து விடும் என்ற அவரது கணிப்புகளைக் கடந்து மூன்றரை நான்கு மாதங்களாகப் போர் நீடிக்கிறது.

இந்தப் போரில், உலக வல்லரசுகளில் ஒன்றான ரஷ்யா ஒப்பீட்டளவில், மிகப் பெரிய அழிவுகளையும் இழப்புகளையும் எதிர் கொண்டுள்ளது. அதனால் போரில் இருந்து பின்வாங்குவது அவமானகரமானது என்ற ரீதியில் புடின் சிந்திக்கிறார்.

1970களின் பிற்பகுதியில் இருந்து 1980களின் இறுதி வரை, ஆப்கானிஸ்தானில் சோவியத் ஒன்றியம் ஒரு வெல்ல முடியாத போரை நடத்திக் கொண்டிருந்தது.

கடைசியில் ரஷ்யா எல்லாவற்றையும் கைவிட்டுப் பின்வாங்கும் நிலை ஏற்பட்டது. ஆப்கானிஸ்தானில் நடத்திய போரைப் போலவே தான், ரஷ்யா இப்போது உக்ரைனில் நடத்திக் கொண்டிருக்கிறது.

இந்தப் போரினால் ரஷ்யாவின் பாதுகாப்புத் தளபாடங்கள் மற்றும் போரிடும் திறன்பெற்ற வீர்ர்களின் இழப்புகளுக்கு அப்பால், அதன் பொருளாதாரம் சிதைந்து வருகிறது.

மேற்குலக நாடுகளின் பொருளாதாரத் தடைகளைத் தாண்டி, ரஷ்யாவினால் தனது உற்பத்திகளை ஏற்றுமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இதன் தொடர்ச்சியாக ரஷ்யா நூறு வருட வரலாற்றில் முதல்முறையாக, இறையாண்மைப் பத்திரக் கடன் ஒன்றைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இலங்கை எவ்வாறான நிலையை அடைந்திருக்கிறதோ, அதே நிலை தான் ரஷ்யாவுக்கும் ஏற்பட்டிருக்கிறது. இலங்கையிடம் இல்லாததைப் போலவே ரஷ்யாவிடமும் டொலர் இருப்பில் இல்லை. அதனால் தான், தனது எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கான பணத்தை ரூபிளில் செலுத்த வேண்டும் என்று ஐரோப்பிய நாடுகளிடம் கட்டளையிட்டது.

அமெரிக்காவின் தடையை மீறி டொலரில் வர்த்தகம் செய்ய முடியாது என்பது ரஷ்யாவுக்குத் தெரியும். ரூபிளில் செலுத்துமாறு உத்தரவிட்டால், ரூபிளைக் கொள்வனவு செய்வதற்கு, அவர்கள் டொலர்களையோ யூரோவையோ செலவிட வேண்டிய நிலை ஏற்படும்.

இவ்வாறாக ஐரோப்பிய நாடுகளை திணறடித்து வரும் ரஷ்யா, பொருளாதாரத்தில் நல்ல நிலையில் இல்லை. இந்த நிலையில் ரஷ்யாவிடம் தஞ்சமடைவதன் மூலம், இலங்கை பொருளாதார ரீதியாக தன்னை தலை நிமிர்த்திக் கொள்ள முடியாது.

ஏற்கனவே, 2010ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது, ரஷ்யா 500மில்லியன் டொலர்கள் பாதுகாப்புத் தளபாடக் கொள்வனவுக்கான கடன் வசதியை வழங்க முன்வந்தது.

அதில், 150 மில்லியன் டொலர்கள் பயன் படுத்தப்பட்ட நிலையில், எஞ்சிய 350 மில்லியன் டொலர்களுக்கு கடற்படைக்கு ஒரு போர்க்கப்பலை விற்க முயன்றது ரஷ்யா.

அது இழுபறியில் இருந்த போது, இலங்கை அரசாங்கம் அந்த 350 மில்லியன் டொலர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள், எரிபொருளை கொள்வனவு செய்வது குறித்து பேச்சு நடத்திய போதும் ரஷ்யா அதற்கு சாதகமான பதிலை அளிக்கவில்லை.

போருக்காக பில்லியன் கணக்கான டொலர்களை செலவிடுகின்ற ரஷ்யா, பிற நாடுகளுக்கு கடன்களை வழங்குவது, உதவிகளை வழங்குவது போன்ற விடயங்களில் அதிகம் ஈடுபாடு காட்டுவதில்லை.

சீனாவின் பக்கத்தில் இருந்து இனி மேல் காரியம் ஆகப் போவதில்லை என்று உணர்ந்து கொண்ட இலங்கை அரசாங்கம், இந்திய மேற்குலக பக்கம் சாய்ந்துள்ள நிலையில், ரஷ்யாவிடம் உதவி கோருவது கொழும்புக்கு சிக்கலானதொரு நிலையாகத் தான் இருந்து வந்தது.

உக்ரைன் போருக்கு முந்திய நிலையை விட பிந்திய நிலை வேறுபட்டது. ரஷ்யாவை எப்படியாவது பணிய வைக்க வேண்டும் என்ற அடிப்படையில் மேற்குலகம் செயற்படுகிறது. மேற்குலகத்தின் தயவு இருந்தால் தான், சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளுடன் நெருக்கடியில் இருந்து மீள முடியும் என்ற நிலையில் இலங்கை இருக்கிறது.

இவ்வாறான நிலையில் ரஷ்யாவுடன் கை குலுக்கப் போய், வீண் பிரச்சினையில் சிக்கிக் கொள்ளக் கூடாது என்பதில் கோட்டா அரசாங்கம் உறுதியாகவே இருந்தது.

ஆனால் ரஷ்யா இலங்கையில் உள்ள தனது நண்பர்களைக் கொண்டு சில சமிக்ஞைகளைக் காண்பித்தது.

மைத்திரிபால சிறிசேன, திஸ்ஸ விதாரண, விமல் வீரவன்ச போன்றவர்கள், ரஷ்யாவிடம் சென்றால் குறைந்த விலைக்கு எரிபொருளைக் கொள்வனவு செய்யலாம் என்ற பகிரங்க அறிக்கைகளின் மூலம் ஆசை காட்டிக் கொண்டிருந்தார்கள்.

ரஷ்யா சர்வதேச சந்தையை விட 35 சதவீதம் குறைந்த விலைக்கு மசகு எண்ணெயை விற்பதாகவும் அவர்கள் கூறினார்கள்.

அது பொய்யானது என்றும், ரஷ்யாவிடம் மசகு எண்ணெய் 35டொலர்கள் குறைவாக கிடைக்காது என்றும் அமைச்சர் காஞ்சன விஜயசேகர கூறியிருந்தார்.

இந்தியாவுக்கு ரஷ்யா, 35 டொலர்கள் குறைவாக மசகு எண்ணெயை விநியோகித்திருந்தது. அதனை இந்திய அமைச்சர்கள் பகிரங்கமாக உறுதிப்படுத்தியிருந்தனர்.

சர்வதேச சந்தையில் உள்ளக மூலக் கூறு அடர்த்திகளின் அடிப்படையில், மூன்று வகையான மசகு எண்ணெய் கிடைக்கிறது.

ஒன்று பிரென்ட் Brent. இது ஏனைய வகைகளை விட விலை அதிகம்.

அடுத்தது. WTI இது இரண்டாவது விலை அதிகமான ரகம்.

மூன்றாவது, ஊரல்ஸ் (Urals) இது சைபீரியாவில் கிடைக்கின்ற வகை. இது மலிவானது.

கடந்த 24ஆம் திகதி நிலவரப்படி, Brent வகை மசகு எண்ணெய் 113.12 டொலர்களும், WTI மசகு எண்ணெய் 107.62 டொலர்களும்.,, ஊரல்ஸ் மசகு எண்ணெய் 86.73 டொலர்களும், விற்கப்பட்டது.

முதல் தர Brent மசகு எண்ணெயை விட, சைபீரியன் மசகு எண்ணெயின் விலை, கிட்டத்தட்ட, 25 டொலர்கள் வரை குறைவாக இருக்கும்.

இரண்டாவது வகைக்கும், ரஷ்ய வகைக்கும் இடையில் சுமார் 20 டொலர்கள் வரை வித்தியாசம் இருக்கும்.

ஆனால், இந்த மூன்று வகை மசகு எண்ணெயில் இருந்தும் பிரித்தெடுக்கின்ற போது, கிடைக்கின்ற எரிபொருளின் தரம் மற்றும் அளவில் மாறுபாடுகள் இருக்கும்.

பலர் ரஷ்யா குறைந்த விலைக்கு மசகு எண்ணெயை விற்கிறது என்று கூறினாலும் தர வேறுபாடுகள் இருப்பதால் தான் அதன் விலை குறைவு.

இப்போது இலங்கை ரஷ்யாவின் பக்கம் பாய முற்படுகிறது. ஏனைய நாடுகள் கைவிரித்து விட்டன.

ரஷ்யாவுக்கு இலங்கையிடம் இருந்து தேயிலை தவிர வேறொந்த வர்த்தக நலன்களும் பெரிதாக இல்லை. எரிபொருளுக்கு மாற்றாக தேயிலையை ரஷ்யா கொள்வனவு செய்யலாம்.

அதேவேளை கொழும்பில் உள்ள ரஷ்ய தூதுவர், விமல் வீரவன்ச அணியை சேர்ந்த கட்சிகளை சந்தித்த போது ஒரு விடயத்தை குறிப்பிட்டிருக்கிறார்.

வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டுக்கு தமது நாடு ஒருபோதும் உதவிகளை வழங்காது என்பதே அது.

ஆனால் இந்தியாவுக்கு அனுப்பியது போல பிரதிநிதிகள் குழுவொன்றை மொஸ்கோவுக்கு அனுப்பி வேண்டுகோள் விடுத்தால், மனிதாபிமான உதவிகள் கிடைக்கும் என்று அவர் கூறியிருந்தார்.

அதற்கு முன்னதாக ஜனாதிபதி கோட்டா ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் பேசினால் எரிபொருள் கிடைக்கும் என்று இந்த அணியினர் நம்பிக்கை ஏற்படுத்தினர்.

இந்த நிலையில் தான், கடந்த புதன் கிழமை அவர், ரஷ்ய ஜனாதிபதியுடன் பேசியிருக்கிறார். ஆனாலும் பெரிதாக எந்த வாக்குறுதியும் அளிக்கப்பட்டதாக தெரியவில்லை.

இலங்கையைப் பொறுத்தவரை, ரஷ்யாவுடனான தொடர்பு முயற்சிகளால், மேற்குலக உதவிகள் தடைப்படாமல் இருக்க வேண்டியது முக்கியம். இல்லையேல் அரசனை நம்பி புருசனை கைவிட்ட கதையாகி விடும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# இயக்கங்களின் அன்றைய இயலுமையும் இன்றைய இயலாமையும்?

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் (ஈ.பி.ஆர்.எல்.எப்) அவர்களது, தலைவர் பத்மநாபா கொலை செய்யப்பட்ட தினத்தை, தியாகிகள் தினமாக நினைவு கூர்ந்து வருகின்றனர். அண்மையில் 31வது தியாகிகள் தினம் நினைவு கூறப்பட்டது. நிகழ்வில் பேசுமாறு, பம்பநாபா அபிவிருத்தி ஒன்றியம் என்னும் பெயரில் இயங்கிவரும் ஒரு பிரிவினர், என்னை அழைத்திருந்தனர். இதன் போது நான் பகிர்ந்து கொண்ட சில விடயங்களையே இங்கு கட்டுரையாக்கியிருக்கின்றேன்.

இதிலுள்ள கவலைக்குரிய விடயம் என்னவென்றால், தங்களின் தலைவருக்கான நினைவு தினத்தைக் கூட, ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பினரால், கருத்தொருமித்து, ஒருங்கிணைந்து முன்னெடுக்க முடியவில்லை. ஈழ அரசியலில், ஒற்றுமையின்மை என்னும் நோய், எவ்வாறு தமிழனத்தை பாதித்தது, பாதித்துக் கொண்டிருக்கின்றது என்பதற்கு ஈ.பி.ஆர்.எல்.எப் ஒரு வாழும் சாட்சியாகும்.

ஒரு இயக்கத்தை பிரதிநிதித்துவம் செய்தவர்களாலேயே, தங்களுக்குள் ஒன்றுபட முடியவில்லை யாயின், மற்றவர்கள் அனைவரையும் எவ்வாறு ஓரணியாக கொண்டு வர முடியும்? ஒற்றுமையின்மை என்னும் நோயிலிருந்து அவர்களை எவ்வாறு விடுவிக்க முடியும்? இந்தக் கேள்வியுடன் தான், தமிழ் தேசிய அரசியல் கொஞ்சம் கொஞ்சமாக சீரழிந்து செல்கின்றது. வரலாற்றோடு எவ்வித தொடர்புமில்லாத வியாபாரிகளின் ஆதிக்கத்திற்குள் சென்று கொண்டிருக்கின்றது. விரைவில் அது வியாபாரிகள் உகச்சரிக்கும் தமிழ் தேசியமாக உருமாறலாம்.

இனவிடுதலையை வென்றெடுப்பதற்கு ஆயுதப் போராட்டங்களே, ஒரேயொரு வழி முறையாகும் என்னும் புறச் சூழலில் தான், தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தோற்றம் பெற்றன. உலகின் பல பாகங்களிலும் ஆயுதப் போராட்டங்கள் இடம் பெற்றுக் கொண்டிருந்த காலமது. நான் இந்த காலகட்டத்தை சேர்ந்தவன் இல்லையென்றாலும், வரலாற்றை உற்று நோக்கும் மாணவன் என்னும் வகையில் விடயங்களை தேடியும், சம்பந்தப்பட்டவர்களோடு உரையாடியும் அறிந்து கொண்டதன் மூலம், இந்த வரலாற்று காலகட்டத்திற்குள் செல்ல முடிந்தது.

இன்று முன்னாள் இயக்கங்கள் என்னும் அடைமொழியுடன், எதைச் சாதிப்பதற்காக சென்றோம் இப்போது எந்த நிலையில் இருக்கின்றோம் இனி எங்களால் என்ன செய்ய முடியும்? என்னும் கேள்விகளுடன், வெறும் நினைவுகளை அசை போட்டுக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரும், அன்றைய சூழலில், மாபெரும் கனவுகளுடன் தான் இயங்கங்களில் இணைந்து கொண்டவர்கள்.

உண்மையில், அன்றைய சூழலில் இயக்கங்களில் இணைந்து கொண்டவர்கள் பலர், எந்த இயக்கமென்று ஆராய்ந்து இணைந்தவர்களல்லர். அப்படி ஆராய்வதற்கான தேவையும் அப்போது இருந்திருக்கவில்லை. ஏனெனில், இயக்கங்களில் சிறந்தது எது என்னும் கேள்விகளில்லாத காலமது. அனைவருமே விடுதலைக்காக போராடுபவர்கள் என்னும் பெருமை மட்டுமே மேலோங்கியிருந்த காலமது. இயக்கங்களின் தலைமைகளுக்கிடையில் மோதல்களும், பேதங்களும் ஏற்பட்ட போது, அனைத்துமே நிர்மூலமாகியது. சமூதாயத்தை தலைகீழாக புரட்டிப் போடும் கனவுகளோடு சென்றவர்கள், துரோகி, ஒட்டுக்குழுக்கள், மண்டையன் குழுக்கள், காட்டிக் கொடுப்பவர்கள், கூலிப்படைகள் இப்படியான அடைமொழிகளிலிருந்து தப்பிப்பிதற்காக, சமூதாயத்தையே விட்டே ஓடவேண்டிய துர்பாக்கிய நிலையுருவாகியது. இறுதியில் விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கும் இதே நிலை தான் ஏற்பட்டிருக்கின்றது.

2015இல், ஒரு சில முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள், தேர்தலில் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் தருமாறு சம்பந்தனிடம் கோரினர். அப்போது சம்பந்தன் அவர்களுக்கு



வழங்கிய பதில் உங்களிலிருந்து தான், கே.பி வந்தார். உங்களிலிருந்து தான் கருணா வந்தார். நீங்கள் அரச புலனாய்வு பிரிவோடு சேர்ந்து செயற்படுதாக சந்தேகங்கள் இருக்கின்றன உங்களுக்கு எவ்வாறு, இடம் தரமுடியுமென்று கேட்டிருந்தார். இதிலுள்ள துர்பாக்கியம் என்னவென்றால், சம்பந்தன் அவ்வாறு கூறுகின்ற போது முன்னாள் இயக்கங்களான கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள், சம்பந்தனை மறுதலிக்கவோ கண்டிக்கவோ இல்லை. ஒரு கட்சியில் ஆசனங்கள் வழங்குவது — வழங்காமல் விடுவது அந்த கட்சியின் முடிவு. விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு கட்டாயம் ஆசனங்கள் வழங்கத் தான் வேண்டுமென்பதல்ல.

ஆனால் அவர்களை நிராகரிப்பதற்கு சொல்லப்படும் காரணத்தில்தான், இந்த சமூதாயத்தின் மோசமான சிந்தனைப் போக்கு வெளிப்படுகின்றது. முன்னர் ஏனைய இயக்கங்களை அரச ஒட்டுக் குழுக்களென்று கூறி, அவமானப்படுத்திய போது, அமைதியாக இருந்த தமிழ் சமூகம், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அவமானபடுத்தப்பட்ட போதும், அமைதியாகவே இருந்தது. மொத்தத்தில் இயங்கங்களின் இன்றைய நிலை பூச்சியமாகும்.

ஏனைய இயக்கங்களுக்கு எது நடந்ததோ, அதுவே இப்போது, விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கும் நடந்திருக்கின்றது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, பல பிரிவுகளாக இருப்பது போன்றுதான், விடுதலைப் புலியாதரவு புலம்பெயர் தரப்புக்களும் இருக்கின்றன.

இன்று இயக்கங்களின் நிலைமையை ஒரு வரியில் கூறுவதனால், கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைமை எனலாம். எந்த மிதவாத அரசியல் கட்சிகளை புறம்தள்ளி இயக்கங்கள் தோற்றம் பெற்றனவோ — இன்று அதே மிதவாதிகளின் தயவில் — அவர்கள் போடும் ஆசனங்களை எண்ணிக் கொண்டிருக்கும் இழி நிலையில் தான் இயக்கங்களின் கதையிருக்கின்றது. தமிழரசு கட்சியின் தயவில் அல்லது விக்கினேஸ்வரன் போன்றவர்களின் தயவில், தங்களின் எதிர்காலத்தை தேடும் நிலையில் தான் இன்று முன்னாள் இயக்கங்களின் நிலையிருக்கின்றது. இந்த நிலைமைக்கு யார் காரணம்? ஒரு காலத்தின் அரசியலை தீர்மானித்தவர்களால், ஏன் இன்றைய ஜனநாயக அரசியலில் சொல்வாக்கு செலுத்த முடியவில்லை? மிதவாதிகளிடமிருந்த அரசியல் பார்வைகளை விடவும் செழுமையான அரசியல் பார்வைகள் இயக்கங்களின் தலைமைகளிடம் இருந்தது. அன்றைய சூழலில் மிகவும் ஆளுமைமிக்க தலைவராக கருதப்பட்ட அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் கூட 1988இல், இடம் பெற்ற, மாகாண சபை தேர்தலில் போட்டியிட முன்வரவில்லை. இத்தனைக்கும் இந்திய-இலங்கை ஒப்பந்

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



தத்தை அமிர்தலிங்கம் ஆதரித்திருந்தார். அந்த ஒப்பந்தத்திற்கு பின்னர் தான், தமிழ் மக்கள் நிம்மதியாக நித்திரை கொள்ள முடிந்ததென்று, உரையாற்றிய அமிர்தலிங்கம், மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு, ஒரு வலுவான தலைமைத்துவத்தை வழங்க முன்வரவில்லை.

விடுதலைப் புலிகளின் எதிர்ப்பை கருத்தில் கொண்டே அமிர்தலிங்கம், அவ்வாறனதொரு முடிவை எடுத்ததாக சிலர் கூறுகின்றனர். ஆனாலும் ஒரு ஆளுமைமிக்க தலைவர் தனக்கு சரியென்று படும் ஒன்றில் பின்நிற்கக் கூடாது. இந்தப் பின்புலத்தில்தான், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டது. இன்று பின்நோக்கி பார்த்தால், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முடிவை வரலாறு, நியாயப்படுத்தியிருக்கின்றது. இந்தியாவை புறம்தள்ளி, ஈழத்தமிழர்கள் எந்தவொரு அரசியல் தீர்வையும், எக்காலத்திலும் பெற முடியாதென்னும் வரலாற்று உண்மை நிருபிக்கப்பட்டிருக்கின்றது. பத்மநாபா கூறிய ஒரு கருத்தை சில வருடங்களுக்கு முன்னர் எனது கட்டுரையொன்றில், பயன்படுத்தியிருக்கின்றேன்.

(22ம் பக்கம் பார்க்க)



# தொடரும் நெருக்கடி

கட்டுரையாளர்:- தமிழகத்தில் இருந்து

- குடந்தையான் -

அ.தி.மு.க.வின் உட்கட்சி விவகாரத்தில் நடைபெறும் பரபரப்பான அரசியல் நிகழ்வுகள், அரசியல் களத்தில் குறிப்பிட த்தக்க விவாதப் பொருளாக மாற்றம் பெற்றிருக்கிறது.

தி.மு.க.விற்கு எதிராக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரால் தொடங்கப்பட்ட அ.தி.மு.க. அவர் மறைந்த பிறகு புரட்சித் தலைவி (ஜெயலலிதா) அம்மாவினால் கட்டி பாதுகாக்கப்பட்டது.

தற்போது அக்கட்சிக்கு உண்மை யிலேயே 'தலைமை' இல்லாமல், வழி நடத்த வழிகாட்டிகள் இல்லாமல், இரண்டாம் கட்ட மற்றும் கழகத்தின் தலைமை நிலைய முன்னணி நிர்வாகி களால் நடத்தப்படுகின்றமை துரதிஷ்டம் தான்.

இதற்கு காரணம் முதல்வராகவும், கழகத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றிய பன்னீர்செல்வம் தான் என்று ஒரு தரப்பினரும், கட்சியின் விதி களுக்கு அப்பாற்பட்டு, கட்சியின் மாவ ட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகி களில் பெரும்பான்மையானவர்களின் ஆதரவை பெற்ற எடப்பாடி பழனிச்சாமி தான் என்று மற்றொரு பிரிவினரும் பரஸ்பரம் குற்றம் சாட்டி கொள்கிறார் கள். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரை எஸ்.டி.சோமசுந்தரம் எதிர்த்து நமது கழகம் என்ற கட்சியை தொடங்கி காணாமல் போனார். புரட்சித்தலைவி அம்மாவை எதிர்த்து திருநாவுக்கரசர் கட்சியை தொடங்கி தோல்வியடைந்து, பல்வேறு கட்சிகளுக்கு தாவி, தற்போது காங்கிரஸ் கட்சியில் அடைக்கலமாகி, அக்கட்சியின் மக்களவை உறுப்பினராக அரசியல் தடம் தெரியாமல் இருக்கிறார்.

இதே போன்றதொரு நிலைமை தான் ஒற்றை தலைமை வேண்டும் என்று பெரும்பான்மையான ஆதரவுடன் இரு க்கும் எடப்பாடி பழனிச்சாமியை ஏற்றுக் கொள்ளாமல், அவருக்கு எதிராக தொண்டர்களின் ஆதரவில்லாத பன்னீர் செல்வம் விரைவில் அரசியலிலிருந்துக் காணாமல் போய்விடுவார் என்று கணிக் கப்படுகின்றது.

தி.மு.க.வில் பேராசிரியர் அன்பழகனுக்கு மரியாதையும், உரிய அந்தஸ்தும் கொடு த்து கருணாநிதி வைத்திருந்ததை போல் அருமையான வாய்ப்பு வாய்ப்பை எடப்பாடி பழனிச்சாமி பன்னீர் செல்வத் திற்கு வழங்க ஆர்வமாக காத்திருந்தார்.



ஆனால் தேசிய கட்சி மற்றும் தி.மு.க. வின் மறைமுக ஆலோசனையின் பெயரில் பன்னீர்செல்வம் செயல்படுவதால் அவர் சொந்த கட்சியினராலேயே 'துரோகி' என்று முத்திரை குத்தப்பட்டு ஒதுக்கப்பட்டிருக்கிறார்.

எடப்பாடி பழனிச்சாமி முதல்வரான பிறகு, எப்படி கட்சியின் நிர்வாகிகளை கையாள்தையும் துல்லியமாக தெரிந்து வைத்திருப்பதால் தான் அவரால் ஒற்றை தலைமையை நோக்கி காய் நகர்த்தி வெற்றி பெற முடிந்திரு க்கின்றது.

ஆனால் கட்சி ஒருவரை முதல்வர் வேட்பாளர் என்று அறிவித்தவுடன், அவரை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண் டும் என்ற எந்த கட்டாயமும் இல்லை. ஆனால் முதல்வராக பதவி ஏற்ற நான் காண்டு காலத்தின் கூட அவர் செல் வாக்கப் பெற்ற தலைவராக இல்லை.

பா.ஜ.க.வை மறைமுகமாக ஆதரிப்பதில் பன்னீர்செல்வத்திற்கு சளைத்தவரல்ல எடப்பாடி. இருப்பினும் அ.தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு எடப்பாடிக்கு இருப்பதால் தற்போது அவரது தலைமையே சரியானது என்ற வாதமே அதிகமாகவுள்ளது.

இரட்டைத்தலைமை விவகாரத்தில், சசிகலாவை முன்னிறுத்தி, அவரை பகடைக்காயாக்கி, எப்படி ஒருங்கிணை ப்பாளர் என்ற பதவியை பன்னீர்செல்வம் பெற்றாரோ, அதே போன்றதொரு உத் தியைப் பயன்படுத்தி, பன்னீர் செல்வத் தையே பலிகடா ஆக்கி சொந்தக் கட்சி யினரே அவரை 'துரோகி' என்று சொல்ல வைத்து, ஒற்றை தலைமை க்கு உயர்ந்திருக்கிறார் எடப்பாடி.

அவ்வாறானவர், வலிமைமிக்க ஒற்றை தலைமையாக நீடிப்பார் என எந்த உத்தரவாதத்தையும், அவரை தெரிவு செய்திருக்கும் முன்னணி மற்றும் மூத்த நிர்வாகிகள் வழங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. தற்போது பெரும் பான்மை பொதுக்குழு உறுப்பினர்களால் 'ஒற்றை தலைமை' என்று முன்மொழி யப் பட்டிருக்கும் எடப்பாடிக்கு எதிராக, பன்னீர்செல்வம், சசிகலா, பா.ஜ.க. தி.மு.க. என்று ஒவ்வொருவரும் தங்க ளுடைய கோணங்களிலிருந்து எதிர்த் தாக்குதலை தொடுத்துக் கொண்டே இருக்கின்றார்கள்.

சொந்த கட்சியின் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் மனநிலையை துல்லியமாக அவதானிக்க இயலாதவாராய், பதவியில் நீடிக்க வேண்டும் என்ற பிடிவாதம் காரணமாக, கட்சியின் ஜனநாயகத் தன்மைக்கு எதிராக பன்னீர்செல்வம் சென்று விட்டார். அவரால் மீண்டும் கட்சிக்குள் திரும்ப இயலாத தொலை விற்கு பயணப்பட்டு விட்டார்.

தற்போது கூட ஜூலை 11ஆம் திகதி யன்று நடைபெறவிருக்கும் பொதுக் குழு தொடர்பான விவகாரத்தில் உச்சநீதிமன்றம் ஏதேனும் உத்தரவு பிறப்பித்தால், அதற்குமுன் தங்களையும் கேட்க வேண்டும் என்ற மனு ஒன்றினை பன்னீர்செல்வம் தரப்பு தாக்கல் செய்திரு க்கிறது.

இதன்மூலம் கட்சிக்குள் தனக்கான முக்கியத்துவம் கட்டாயம் வழங்கப் பட்டாக வேண்டும் என்ற அவரது நிலைப்பாடு உறுதியாக தெரிய வந்தா லும், அவரை தீவிரமாக எதிர்க்காமல், திசைதிருப்பும் உத்தியை மட்டுமே எடப்பாடி ஆதரவாளர்கள் மேற்கொள் கிறார்கள்.

மூன்று சட்டமன்ற உறுப்பினர், ஒரு மக்களவை உறுப்பினர், ஒரு மாநிலங் களவை உறுப்பினர், மூன்று அல்லது நான்கு மாவட்ட செயலாளர்கள் என்ற அளவிற்கு பன்னீர்செல்வத்தின் கட்சி செல்வாக்கு அவரை நிரந்தரமாக காப்ப ாற்றுமா?

சசிகலாவிற்கு எதிராக தர்ம யுத்தம் நடத்தி தொண்டர்களிடையே எழுச சியை ஏற்படுத்தி, தனக்கான ஆதரவு தளத்தை ஏற்படுத்திக் கொண்ட பன்னீர்செல்வம் மீண்டும் ஏதேனும் புதிய பாணியிலான அரசியலை பின்பற்றி, மாயம் செய்தால் மட்டுமே அவரால் மீண்டும் அ.தி.மு.க. தொண்டர்களின் நம்பிக்கையை பெற இயலும். இது நடைபெறுமா?

எடப்பாடி பழனிச்சாமி, கட்சியைக் கைப்பற்றினாலும் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வரா? அவரது தலை மையில், பா.ஜ.க.வுடன் கூட்டணி தொடருமா? என்ற கேள்விகள் எல்லாம் இருக்கின்றன. இவை அனைத்திற்கும் விடைகாண்பதாக இருந்தால் ஜூலை முழுவதும் பொறுத்திருக்க வேண்டி யுள்ளது.

## சர்வதேச நாணய நிதியத்திடம் 6 தமிழ்த்

(8ம் பக்கம் தொடர்ச்சி) பெறுவதற்கான வழிகளைக் காணாத வரையில் தற் போதைய நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாது. மேலும் மேலும் கடன்களைப் பெறுவதானது தற்போதைய கடன் சிக்கல்களுக்கு தீர்வாகாது. இலங்கை உட்பட பல வறிய நாடுகள் பொருளாதார மீட்சிக்காக சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் களைப் பெறுவதற்காக கதவுகளைத் தட்டிக்கொண்டிருக்கின்றன.

இவ்வாறான நிலையில் இலங்கைக்கு நன்மைகளை வழங்கக்கூடிய முதலீட்டாளர் குழுக்களில் ஒன்றான அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் போன்றவற்றில் வசிக்கும் புலம்பெயர் வாழ் தமிழர்கள் முதலீடுகளைச் செய்வதற்கு தகுதியானவர்களாக உள்ளனர். இவர்கள், தமது சொந்த மண்ணிலிருந்து பல ஆண்டுகளுக்கு முன்பு கலவரங்கள் மற்றும் உயிர் அச்சுறுத்தல்கள் ஆகியவற்றின் காரணமாக வெளியேறியவர்களாக உள்ளனர்.

அவ்விதமானவர்கள் முதலீடுகளைச் செய்வதற்கு பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியுள்ளது. அவ்வாறு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டால் மாத்திரமே அவர் களின் முதலீடுகள் சாத்தியமாகும்.

விசேடமாக, சர்வதேச ஒப்பந்தங்களின் விதிகளின் கீழ் பாதுகாக்கப்பட கூடிவாறாக புலம்பெயர்ந்த தமிழ் முதலீடுகளை வகைப்படுத்தும் அரச கொள்கை மாற்றங்கள் அவசியமாகின்றது.

அத்துடன் இலங்கையின் சார்பாக கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையில் ஈடுபடுவ தற்கு சர்வதேச சமூகத்தின் எந்தவொரு முயற்சியும் தமிழர் களை பங்குதாரர்களாக உள்ளடக்கியிருக்க வேண்டும் என்ற உண்மையை வலியுறு த்த விரும்புகிறோம்.

புலம்பெயர் தமிழர்களின் நம்பிக்கையை இலங்கை அரசாங்கம் பெற முடிந்தால், அது நலிந்து போன இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதில் ஆக்கப்பூர்வமான பங்களிப்பிற்கு வழிவகுக்கும்.

புலம்பெயர் தமிழர்களை முதலீடு மற்றும் உதவிக்கான சாத்தியமான மற்றும் சக்தி வாய்ந்த ஆதாரமாக இணைத்துக் கொள்வதற்கு சர்வதேச நாணய நிதியமானது இலங்கை குறித்த அதன் ஏற்பாடுகளை முன்மொழியும் போது உள்ளீர்க்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

இலங்கையின் இக்கட்டான நேரத்தில் உதவி செய்யத் தயாராக உள்ள அனைத்து பங்குதாரர்களுடனும் ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களான நாங்கள், கலந்துரையாடலில் ஈடுபடத் தயாராக உள்ளோம் என்றுள்ளது.

(5ம் பக்கத் தொடர்ச்சி) இலங்கைத் தீவின் இன்றைய நிலைக்கு ஆட்சி யாளர்கள் எந்தளவு பொறுப்போ, அந்தளவுக்கு பௌத்த மதபீடங்களும் பொறுப்பாகும்.

மனிதன் செய்த தவறுகளுக்கு மனிதன்தான் பரிகாரம் தேட வேண்டும். கடவுளல்ல. சிங்கள-பௌத்த மேலாதிக்கவாதிகள் புரிந்த தவறுகளை உணர்ந்து, அவற்றை சரிசெய்வது தொடர்பில் சிந்தித்தால் மட்டுமே நாட்டுக்கு விமோசனமுண்டு.




உ
சிவமயம்






# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்
# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.com

## ஸ்ரீ கற்பகவிநாயகர், ஸ்ரீ நாகபூசணி அம்மன், ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி
## மும்மூர்த்தி அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

**03.07.2022 ஞாயிறு தொடக்கம் 19.07.2022 செவ்வாய் வரை**

எம்பெருமான் அடியார்களே!

ஐயப்பன் ஆலயத்தில் எழுந்தருளி அருள்பாலித்துவரும் ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானுக்கும், ஸ்ரீ நாகபூசணி அம்பாளுக்கும், கஜவல்லி, மஹாவல்லி சமேத ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானுக்கும் ஏக காலத்தில் அலங்கார உற்சவம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 19.07.2022 செவ்வாய்க்கிழமை வைரவர் சாந்தி வரை மூன்று சுவாமிகளுக்கும் அலங்கார உற்சவம் நடைபெறவுள்ளதால், Covid - 19 சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி அடியார்கள் வருகை தந்து எம்பெருமானைத் தரிசித்துப் பலன் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**திருவிழா ஆரம்பம்: 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை**
**சப்பறத் திருவிழா: 15.07.2022 வெள்ளிக்கிழமை மாலை**
**தேர்த் திருவிழா: 16.07.2022 சனிக்கிழமை பகல்**
**தீர்த்தத் திருவிழா: 17.07.2022 ஞாயிற்றுக்கிழமை**
**திருக்கல்யாணமும் பூங்காவனமும்: 18.07.2022 திங்கட்கிழமை**
**வைரவர் சாந்தி: 19.07.2022 செவ்வாய்க்கிழமை**

## கிரியாகால விபரம்

**03.07.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணிக்கு கணபதி ஹோமம்**


**தினமும்:** மாலை 6:00 மணிக்கு அபிசேகம் — இரவு 8:00 மணிக்கு வசந்த மண்டபப்பூசை
இரவு 7:30 மணிக்கு விசேட பூசை — இரவு 8:15 மணிக்கு சுவாமி வீதி வலம் வருதல்
இரவு 9:15 மணிக்கு பிரசாதம் வழங்கல், நடைசாத்தல்

| | |
|---|---|
| **தேர்த்திருவிழா 16.07.2022** | 16.07.2022 சனிக்கிழமை காலை 7:00 மணிக்கு சங்காபிசேகம் 9:00 மணிக்கு விசேட பூசை, 10:00 மணிக்கு வசந்தமண்டப பூசை ஆரம்பித்து, தொடர்ந்து 11:00 மணிக்கு மூன்று அழகிய சித்திரத் தேரில் பிள்ளையார், நாகபூசணி அம்மன், முருகப் பெருமான் வீதிவலம் வரும் அற்புதக் காட்சி நடைபெறும். நண்பகல் 12:00 மணிக்கு பச்சைசாத்தப் பெற்று தொடர்ந்து 1:00 மணிக்கு பிராயச்சித்த அபிசேகம் நடைபெற்று தேரடி உற்சவம் இடம் பெறும். |
| **தீர்த்தம் 17.07.2022** | 17.07.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணிக்கு மூன்று சுவாமிகளுக்கும் தீர்த்தத் திருவிழா நடைபெறும். |
| **பூங்காவனம் 18.07.2022** | 18.07.2022 திங்கட்கிழமை மாலை ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானுக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெற்று பிள்ளையார், நாகபூசணி அம்பாள், முருகப் பெருமான் ஆகிய மூன்று சுவாமிகளுக்கும் பூங்காவன உற்சவம் நடைபெறும். |
| **வைரவர் மடை 19.07.2022** | 19.07.2022 செவ்வாய்க்கிழமை மாலை வைரவ சுவாமிக்கு விசேட அபிசேகம், மடை, பூசை என்பன நடைபெறும். |


முக்கிய குறிப்பு: அடியார்கள் ஒன்ராறியோ அரச Covid-19 விதிமுறைக்கு அமைய சுகாதார பாதுகாப்பைப் பின்பற்றி ஆலய தரிசனத்தை மேற்கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

இறைசேவையிலுள்ள அறங்காவலர் சபையினர்


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! முடங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பிடிக்கும். நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் கை கொடுப்பார்கள். மனதில் இருந்து வந்த சஞ்சல நிலை மாறும். தருமசிந்தனை உண்டாகும். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். பழைய பாக்கிகள் வசூல் செய்வதில் வேகம் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கலாம்.





ரிஷபராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் இருந்த தடுமாற்றம் நீங்கும். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். பணவரத்து திருப்தி தரும். எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். எந்த வேலையை முதலில் கவனிப்பது என்று குழப்பம் வரும். மேலிடத்துடன் இருந்து வந்த கருத்து மோதல்கள் நீங்கும்.





மிதுனராசி அன்பர்களே! மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். எந்த ஒரு காரியமும் சாதகமாக முடியும். விருப்பமானவர்களுடன் சந்திப்பு ஏற்படும். வாக்கு வன்மையால் நன்மை தரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப் பளு, வீண் அலைச்சல் குறையும். அதிகாரம் அந்தஸ்து கிடைக்கும்.





கடகராசி அன்பர்களே! வீண் வாக்குவாதம் ஏற்படும். மற்றவர்களிடம் அனுசரித்து செல்வது நன்மை தரும். பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். கடித போக்குவரத்து நன்மை தரும். பழைய வீட்டை புதுப்பிப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் சுமையாக வரும். சாமர்த்தியமாக பழகி அனுகூலம் அடைவீர்கள்.




சிம்மராசி அன்பர்களே! தடைப்பட்டிருந்த பணவரத்து வந்து சேரும். உடல் ஆரோக்கியம் சீராகும். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் கூடுதல் செலவை சந்திக்க நேரிடும். தேவையான உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணி காரணமாக உடல் சோர்வு உண்டாகலாம்.




கன்னிராசி அன்பர்களே! பொறுப்புகள் அதிகரிக்கும். வீட்டை விட்டு வெளியே தங்க நேரிடும். தேவையில்லாத வீண் செலவுகள் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருந்தாலும் முடிவில் லாபம் கிடைக்கும். புதிய ஆர்டர்கள் வரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் உழைப்புக்கு ஏற்ற பலனை அடைவார்கள். புதிய வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும்.





துலாம் ராசி அன்பர்களே! தைரியமாக எந்த காரியத்தையும் செய்து முடிப்பீர்கள். சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். வாகனங்களை ஓட்டிசெல்லும் போது கவனம் தேவை. வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். எந்த காரியத்திலும் விட்டு கொடுத்துச் செல்வது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான விவகாரங்களில் தாமதம் ஏற்படலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றம், பதவி இறக்கம் ஆகிய வற்றை சந்திக்க வேண்டி இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். மற்றவர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்படாமல் கவனமாக இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வேலையில் கவனமாக இருப்பது நல்லது. வேறு வேலைக்கு முயற்சி செய்பவர்கள் சிறிது காலம் தள்ளிப் போடுவது சிறந்தது. குடும்பத்தில் ஏதாவது பிரச்சனை தலைதூக்கலாம். எல்லோரையும் அனுசரித்து செல்வது நன்மை தரும்.








தனுசுராசி அன்பர்களே! எந்த காரியத்தையும் செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். பகைவர்களால் ஏற்படும் சிறு தொல்லைகளை சமாளிக்க வேண்டி இருக்கும். புதிய நண்பர்களுடன் பழகும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். அலுவலக பணிகள் மூலம் பதற்றம் உண்டாகும்.




மகரராசி அன்பர்களே! வீண் செலவுகள் ஏற்படும்.எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். கொடுத்த வாக்கை காப்பாற்ற பாடுபட வேண்டி இருக்கும். மற்றவர்களின் பிரச்சனைகளுக்கு வலிய சென்று உதவிகள் செய்வதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண மிகவும் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது.




கும்பராசி அன்பர்களே! அதிகம் உழைக்க வேண்டியது அவசியம். தேவையற்ற பயணங்கள் அதன் மூலம் அலைச்சல். உடல் நல சோர்வு ஏற்படலாம். அடுத்தவரை நம்பி எதையும் ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது. சுபசெலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி நடக்கும். பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்படலாம். போட்டிகள் தலைதூக்கும்.




மீனராசி அன்பர்களே! நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும். நீண்ட நாட்களாக திட்டமிட்ட வாகனம் சொத்து மற்றும் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பயணங்கள் சாதகமான பலன் தருவதாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். தெய்வ பக்தி அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மன மகிழ்ச்சியடைவார்கள்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# இயக்கங்களின் அன்றைய இயலுமையும்

(19ம் பக்கத் தொடர்ச்சி) அதாவது, இந்தியா என்பது ஒரு கருங்கல் பாறை. அதனோடு முட்டினால் நமது தலைதான் உடையும். ஈழத் தமிழர் அரசியலை பொறுத்த வரையில் அன்றும் இந்தியா கருங்கற்பாறை தான் இன்றும் கருங்கற்பாறை என்றுமே பாறை தான். பாறை என்பது பலத்தின் அடைமொழி. அன்று எவருமே முன்வராத நிலையில் தான், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டது. இன்று அந்த மாகாண சபையை பாதுகாப்பது தொடர்பில் தான் உரையாடல்கள் இடம் பெறுகின்றன.

இந்த இடத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அன்றைய முடிவு, வரலாற்றால் நியாயப்படுத்தப் பட்டு விட்டது. இந்தியாவை எதிர்த்து போராட்டத்தை தொடர முடியா தென்னும் நிலையில் தான் விடுதலைப் புலிகள் தவிர்ந்த அனைத்து இயக்கங்களும் ஆயுதப் போராட்டத்தை கை விட்டு ஜனநாயக நீரோட்டத்திற்கு திரும்பின. இன்று மீளவும் தமிழ் தேசிய அரசியல் இந்தியாவின் தயவிற்காகவே காத்திருக்கின்றது.

ஆகக் குறைந்தது 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தினாலே இப்போதைக்கு போதுமான தென்னும் நிலைமை உருவாகியிருக்கின்றது. ஆனால் இப்போது கூட, முன்னாள் இயக்கங்கள் அனைத்தும் ஓரணியில் பயணிக்க முடியவில்லை. ஒன்றாக இணைந்து மக்களை எதிர்கொள்ள முடியவில்லை. இதற்கு யார் காரணமென்றால் அனைத்து இயக்கங்களின் மீதும் தான் விரல் நீள வேண்டும். இத்தனை அனுபவங்களுக்கு பின்னரும் தங்களுக்குள் உடன்பட முடியவில்லையாயின், பின்னர் எதற்காக முன்னாள் இயக்கங்கள் என்னும் அடைமொழி? தியாகங்களால் உருப்பெற்ற வரலாற்றை சுமந்து கொண்டிருக்கும் முன்னாள் இயக்கங்கள், மிதவாதிகள் போடும் ஆசனங்களை எண்ணிக் கொண்டிருப்பதை விடவும், தங்களின் இயக்க அடையாள கட்சிகளை கலைத்து விட்டு செல்லவது பெருமையானது.

இன்றும் இயக்கங்களை பிரதிநிதித்துவம் செய்பவர்களுக்கு முதன்மையான பொறுப்புண்டு. ஏனெனில் தமிழ் சமூகம் அரசியல் ரீதியில் இன்று வந்திருக்கும் இடத்திற்கு அனைவருக்குமே பொறுப்புண்டு. விடுதலைப் புலிகளுக்கு முதன்மையான பொறுப்புண்டு. உண்மையில் 2009இல் பேரழிவு ஒன்றை சந்தித்த போது, விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்போர், சார்பற்ற சுயவிமர்சனமொன்றிற்கு சென்றிருக்க வேண்டும்.

ஆனால் அதற்கு யாருமே தயாராக இருந்திருக்கவில்லை. இல்லாதவர் இருக்கின்றார் என்று கூறி அரசியல் மாயைகளை கட்டமைப்பதிலேயே சிலர் கவனம் செலுத்தினர். இதன் விளைவைத் தான் இன்று தமிழர் அரசியல் எதிர்கொண்டிருக்கின்றது. இன்று அனைத்து இயங்கங்களும் ஒரு புள்ளியில் தான் வந்து சேர்ந்திருக்கின்றன அதாவது, தியாகங்கள் பெறுமதியற்றுப் போனமைக்கு. இருப்பவர்கள் வெறும் சாட்சியாகியிருக்கின்றனர். இப்போது ஒரு வழி மட்டுமே இருக்கின்றது. அதாவது, முன்னாள் இயக்கங்களின் இப்போதைய தலைமைகள், தங்களது ஒவ்வொரு இயக்கங்களினதும், முடிவுகளுக்காக மாண்டு போனவர்களது தியாகங்களை மதிப்பது உண்மையாயின், அனைவரும் ஓரணியில் சங்கமிக்க வேண்டும். ஆளுமைமிக்க ஜனநாயக அரசியல் பாதையொன்றை வகுக்க வேண்டும். முயன்றால், இது முடியாத காரியமல்ல.

ஒரு வரலாற்றியலாளன் என்பவன், வரலாற்றை அதன் போக்கில் சென்று நோக்க வேண்டும் என்பார் வரலாற்றியல் அறிஞர் ஈ.எச்.கார். ஒரு அரசியல் வரலாற்று மாணவன் என்னும் வகையில், கடந்தகால வரலாற்றை அதன் போக்கில் நோக்கினால், இயக்கவழிப் பாதையில் எவருமே புனிதர்களல்லர். அனைவரது பக்கத்திலும் தவறுகள் உண்டு. அந்த தவறுகள் என்னவென்பது அந்த இயக்கங்களில் எஞ்சியிருப்போர்களுக்கு தெரியும். ஆனால் அனைத்து தவறுகளிலிருந்தும் பாடங்களை படிக்க வேண்டிய நிர்பந்தத்தை வரலாறு அவர்கள் மீது சுமத்தியிருக்கின்றது. வரலாற்று சுமையை இறக்கி வைப்பது தொடர்பில் தான் அவர்கள் இப்போது சிந்திக்க வேண்டும். வரலாறு மனிதர்களால் தான் உருவாக்கப்படுகின்றது. மனிதர்கள் உருவாக்கிய வரலாற்றின் திசைவழியை, மனிதர்களால் மாற்றியமைக்கவும் முடியும். தமிழ் இயக்கங்களின் வரலாறென்பது, ஒரு புறம் தியாகங்களால் உருப்பெற்ற வரலாறாக இருக்கும் போது,

மறுபுறம், அது ஒரு இரத்தக்கறை படிந்த வரலாறு, கொலைகளை ஆராதித்த வரலாறு, மனித உரிமைகளை போற்றாத வரலாறு, அரசியல் தீண்டாமைகளை போற்றிய வரலாறு, குற்றவுணர்விற்கு அச்சம் கொள்ளாத வரலாறு. தமிழ் அரசியல் வரலாற்றின் இந்தப் பக்கமே, மறுபுறம், இயக்கங்களின் தியாகங்களை பெறுமதியற்ற தாக்கியிருக்கின்றது. முன்னாள் இயக்கங்கள் அனைத்தும், ஜனநாயக நீரோட்டத்தில் ஒன்றுபட்டால், இந்த வரலாற்று கறைகளை சீர்செய்ய முடியும்.

# பெற்றோல் தாகம்!

(15ம் பக்கத் தொடர்ச்சி) பகிர்ந்து பிஸ்கட்.சோடா.வெற்றிலை.சிற்றுண்டி போன்றவற்றை வாங்கி அந்த நேரத்தை சந்தோசமாக கழிக்கிறார்கள். எரிபொருள் வரிசை நகர்ந்த தெருக்கள் தோறும் வெற்றிலை சப்பித்துப்பப்பட்ட அடையாளங்களையும்.வெற்று பிஸ்கட் பக்கற்றுக்களையும் வெற்றுத் தண்ணீர்ப் போத்தல்களையும் காண முடிந்தது. யார் யாருடையதோ வீட்டு வாசலில் அந்தக் குப்பைகளைக் கொட்டி விட்டு அந்த வரிசை பெட்ரோலை நிரப்பிக் கொண்டு தன் வீட்டுக்குப் போய் விட்டது.

துன்பத்தை கொண்டாட்டமாக மாற்றுவது அல்லது இடுக்கண் வருங்கால் சிரிப்பது என்பது ஒரு கலை.அது எல்லாருக்கும் வாய்க்கப் பெற்ற ஒரு கலை அல்ல.அதேசமயம் துன்பமான வேளைகளில் மற்றவர்களுக்கு உதவுவது என்பதும் ஒரு பெருங் கலை. எரிபொருளுக்காக காத்திருந்த மக்களுக்கு அந்தந்த ஊரைச் சேர்ந்த வர்த்தகர்கள், தன்னார்வலர்கள் உதவி புரிந்திருக்கிறார்கள். அவசரமாக தங்களுக்கிடையே ஒரு ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி வரிசைகளில் காத்திருந்தவர்களுக்கு தின்பாண்டங்கள் சிற்றுண்டிகள் ஏன் ஒரு வேளை உணவைக் கூட வழங்கிய சில ஊர்கள் உண்டு. சில நகரங்கள் உண்டு.

மிக நீண்ட கிலோமீட்டர் கணக்கான மணித்தியாலக் கணக்கான எரிபொருள் வரிசை என்பது நாடு தோல்வியடைந்து விட்டது என்பதைத் தான் காட்டுகிறது. அரச நிர்வாகம் தோல்வியடைந்து விட்டதைத் தான் காட்டுகிறது.

அதேசமயம் அந்த வரிசையில் நிற்கும் மக்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பது ஒரு சமூகமாக அவர்கள் தோல்வியடைந்து விட்டார்களா இல்லையா என்பதையும் காட்டுகின்றதா?


கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம் பெருமையுடன் வழங்கும்
இவ்வாண்டின்
மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி
அனுமதி இலவசம்
FREE ADMISSION
JOYTHI
Blazing Minds
2022
Super Singer
Balaji
Super Singer
Vanathi
Super Singer
Abarna
Mega Tuners
POWERED BY
ANANTH
THARMALINGAM
RAJESH
LINGANATHAN
416-939-9525
THE REMAX Guys
RE/MAX COMMUNITY
RAISING YOUR VALUE
PLATINUM SPONSOR
RhynoCare
TAKE CHARGE OF YOUR HEALTH
416 830 8181
SILVER SPONSOR
Niuniu's ROOFING INC.
647-567-8564
GRAND MUSICAL EVENT
WITH CANADIAN SINGERS & SUPER SINGERS
JULY 30 - 31 ALL DAY EVENT
Canada Sri Ayyappan Temple
635 Middlefield Road, Scarborough, ONTARIO. M1V 5B8
FOR ADD AND VENDORS PLEASE CONTACT : 416-321-6104, 416-321-7558



மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
HOMELIFE HIGHER STANDARDS
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6




RANJANI
THIRUKESWARAN
LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON-M1X 0C3
(Markham /McNicoll)
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)




மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
KABIS
416-357-2847
kulasingam33@yahoo.ca
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life




OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE HIGHER STANDARDS
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*




RENOWNED FOR
AUTHENTIC
KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500




அபாயம்
உண்மையாகலாம்.
சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.
புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?
In Canada
Breast Cancer 1 woman in 8
Prostate Cancer 1 man in 7
Heart disease 1 person in 4
Stroke (CVA) 1 person in 20
Fortunately, more people are surviving these afflictions and living longer lives.
Survival Rate
Cancer 60%
Heart Attack 85%
Stroke 1 person in 4
Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.
- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years
BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%
Industry critical illness claim breakdown
Heart attack: 13%
Other: 16%
Stroke: 5%
Coronary surgery: 3%
Cancer: 63%
iA Financial Group
AJITH SABARATNAM
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.